பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 11 | வெள்ளிக்கிழமை 25.01.2019 | கதிர் 81

இனிது ரகசியம் அல்ல!

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தோற்கும் நிலையில் நகர்வது போல தோற்றுவதால் உங்கள் அரசியல் நிலைப்பாடு என்னவாகப் போகின்றது, ஏற்கனவே குறிப்பிட்டபடி அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவீர்களா என்று சுமந்திரனைப் பார்த்து நான் வெட்டு ஒன்று துண்டு பக்கம் 02

இந்த அரசும் தீர்வு தராது!

அமைச்சர் ரிஷாத் திட்டவட்டம்

வவுனியா, ஜனவரி 25

"தற்போதைய அரசோ, ஜனாதிபதியோ, பிரதமரோ ஒரு தீர்வுத் திட்டத்தைத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள அரசமைப்புப் பிரேரணை பல்வேறு படிமுறைகளை தாண்டவேண்டியுள்ளது. அரசின் எஞ்சிய ஆயுட் காலத்துக்குள் அது சாத்தியமாகுமென்று நான் நினைக்கவில்லை."

இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன். பக்கம் 11

வடக்கில் கண்ணிவெடிகள் அகற்ற ஜப்பான் நிதி உதவி

ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, ஜன. 25

வடக்கு மாகாணத்தில் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றலுக்கு ஜப்பான் அரசு பக்கம் 02

மிக எளிமையான முறையில் நடந்தது மஹிந்தவின் கடைசி மகன் திருமணம்

கொழும்பு, ஜன. 25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் 11

காங்கேசனில் எரிபொருள் நிலையம் 28 வருடங்களுக்குப் பின்னர் திறப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 25

இராணுவக் கட்டுப்பாட்டில்இருந்துவிடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வரும் காங்கேசன் துறைப் பிரதேசத்தில் 28 வருடங் பக்கம் 11

நாயாற்றில் புத்தர் சிலையை நிறுவ இடைக்காலத் தடை!

முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவு

முல்லைத்தீவு, ஜ.ன. 25

முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் புத்தர் சிலை அமைக்கும் பணிகளை இடைநிறுத்து மாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று இடைக்காலக் கட்டளை வழங் பக்கம் 11

1000 ரூபா போராட்டத்துக்கு கூட்டமைப்பும் முழு ஆதரவு

கொழும்பு, ஜன. 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1000 ரூபா அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்கும் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் பக்கம் 11

மஹிந்தவின் மகனின் திருமணத்தில் ரணில்

கொழும்பு, ஜன. 25

தங்காலை – வீரக்கொட்டியவில் நேற்று நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷவின் இளைய பக்கம் 11

சிங்கப்பூர் ஜனாதிபதியை சந்தித்தார் மைத்திரிபால

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 25

ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் துறை சார்ந்த நிறுவனத் தலைவர்கள் மாநாட்டில் முதன்மை உரையை நிகழ்த்து பக்கம் 11

அதிகாரங்களை மக்களிடம் பகிர அஞ்சுகின்றனர் அரசியல்வாதிகள்

ஜப்பான், ஆஸி. தூதுவர்களிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜனவரி. 25

மக்களிடம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 11

3 மாதங்களாக நாடாளுமன்றம் செல்லவில்லையாம் மைத்திரி!

கொழும்பு, ஜன. 25

கடந்த மூன்று மாதத்துக்கும் மேலாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றுக்குச் சமூகமளிக்க வில்லையென மக்கள் விடுதலை பக்கம் 02

தோட்டத்தொழிலாளர் அன்று முதல் இன்று வரை வஞ்சிக்கப்படுகின்றனர்

துரோகங்களைச் சபையில் பட்டியலிட்டார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 25

கல்வி, சுகாதாரம் என அனைத்து வழிகளிலும் – துறைகளிலும் பெருந்தோட்ட மக்கள் புறக் பக்கம் 02

ஜனவரி 31ஆம் திகதி வரை கம்பனிகளுக்கு காலக்கெடு

தொழில் அமைச்சர் அதிரடி

கொழும்பு, ஜன. 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தப் பேச்சில் இம்மாத இறுதிக்குள் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் துறைசார் அமைச்சர் என்ற வகையில் எனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தொழி பக்கம் 11

சாராயத்தில் கலப்படம் செய்ய எடுத்துவரப்பட்ட

7,500 லீற்றர் எத்தனோல் சுன்னாகத்தில் சிக்கியது!

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். குடாநாட்டுக்குப் பனம் சாரயத்தைத் தருவித்து விநியோகிக்கும் – சுன்னாகம் பகுதியில் பக்கம் 02

வழிபறிக் கொள்ளையன் யாழ்ப்பாணத்தில் சிக்கினார்

அவரின் சகாவும் கைது

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த வழிப்பறி உள்ளிட்ட நகைக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நகைகளைப் பெற்று அவற்றை உருக்கி விற்பனை செய்யும் சகாவும் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர்களிடமிருந்து ஒரு தொகுதி தங்க ஆபரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

குடாநாட்டின் பல இடங்களிலும் அண்மைய நாள்களில் வழிப்பறிகளும் நகைக் கொள்ளைகளும் இடம்பெற்று வந்தன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நகைக் கொள்ளைகளுடன் தொடர்புடைய ஒருவரையும் அந்த நகைகளை உருக்கிக் கொடுக்கின்ற ஒருவரையும் நேற்று வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் களவாடப்பட்ட – கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான பதினைந்து பவுண் நகைகளும் மீட்கப்பட்டன.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ-07)

7,500 லீற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மதுபானச்சாலை உரிமையாளர் ஒருவருக்கு எடுத்துவரப்பட்ட சுமார் 7 ஆயிரத்து 500 லீற்றர் எத்தனோல் (தூய மதுசாரம்) கைப்பற்றப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னிலங்கையிலிருந்து லொறி ஒன்றில் எடுத்துவரப்பட்ட 20 லீற்றர் கொள்ளவுடைய 371 கொள்கலன்களே கைப்பற்றப்பட்டன. அதனை எடுத்து வந்த லொறிச் சாரதி மற்றும் அவரது உதவியாளர் இருவரும் சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். குடாநாட்டுக்கு விநியோகிக்கப்படும் பனம் சாரயத்துக்கு கலப்படம் செய்வதற்காகவே இந்தப் பெரும் தொகை எத்தனோல் மதுபானச்சாலை உரிமையாளரால் எடுத்துவரப்பட்டது என்று ஆரம்ப விசாரணைகளில் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

1 லீற்றர் எத்தனோல் சுமார் 100 சாராயப் போர்த்தல்களுக்குக் கலப்படம் செய்வதால் மதுபானச்சாலை உரிமையாளருக்குப் பல கோடி ரூபா இலாபம் கிடைப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வடக்கில் இந்தப் பெரும் தொகை எத்தனோல் மீட்கப்பட்டது இதுவே முதன்முறை என்று சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

எத்தனோல் என அழைக்கப்படும் தூய மதுசாரம் ஒரு கிளர்ச்சியை அல்லது போதையை ஏற்படுத்தும். அத்துடன், மதுசாரயத்துக்கு அடிமையாக்கும் பொருளாகவும் காணப்படும் எத்தனோல் நச்சுத் தன்மையானது. அத்துடன், குறிப்பிட்ட அளவைவிட எத்தனோல் அதிகரித்தால் அந்த சாரயத்தைப் பருகுவோரின் உடன்நிலை மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

624,382 அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக 10 கோடி இலங்கை ரூபா) மானிய நிதியுதவி வழங்கியுள்ளது.

இதற்கான உடன்படிக்கை நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவரின் வாசஸ்தலத்தில் கைச்சாத்திடப்பட்டது

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அஹிரா சுகியாமா, சமூக ஒற்றுமைக்கான டெல்வன் உதவித் திட்ட நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருக்கிடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றலுக்கு பிரதான உதவி வழங்குனராக ஜப்பான் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருவதுடன், அடித்தள மனிதப் பாதுகாப்புத் திட்டத்திற்காக இதுவரை 34.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது.

இந்த உதவி, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்த உதவியுள்ளதுடன், இடம்பெயர்ந்த மக்களின் விவசாயம் மற்றும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், 2020 ஆம் ஆண்டில் கண்ணிவெடியற்ற இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற இலக்கைக்கொண்டு அமைந்துள்ளது.

டாஷ் நிறுவனம் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றலை மேற்கொண்டு வருகின்றது.

இந்த மானிய உதவித்திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட டாஷ் நிறுவனத் திட்டமிடல் பணிப்பாளர் ஆனந்த சந்திரசிறி, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைக்கு ஜப்பான் பிரதான ஆதரவாளராக ஆரம்பத்திலிருந்து செயற்பட்டு வருகிறது.

அத்தோடு, டாஷ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட மானிய நிதியானது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மாத்திரமல்லாமல் மீள்குடியேறிய மக்களின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் உதவும் – என்றார். (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாகக் கிளப்பிய கேள்வி பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது.

ஒரு பத்திரிகையாளனின் பண்பியல்புக்கு இது பொருத்தமற்றது, இப்படி நெற்றி முட்டக் கேள்வி எழுப்புவது நாகரிக பத்திரிகையியலில் ஏற்புடையதன்று, எதிர்த்தரப்பு அரசியல்வாதி ஒருவர் பச்சையாக எழுப்ப வேண்டிய கேள்வியை பத்திகையாளர் ஒருவர் எதிரணி அரசியல்வாதியாகிக் கேட்கக்கூடாது என்றெல்லாம் பல நண்பர்கள் 'அட்வைஸ்' தரத் தவறவில்லை.

இந்த விவகாரத்தில் சுமந்திரனைக் காப்பாற்ற – சுமந்திரன் தரப்புக்காகக் குரல் எழுப்ப – இப்படிப் பலர் முன் வந்திருக்கும் அதேசமயம், அவரின் ஆத்மார்த்த தோழரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இப்பணியில் தவறவில்லை.

"ஒற்றையாட்சி, ஒருமித்த நாடு, கூட்டாட்சி (சுமஷ்டி), தனிநாடு, தமிழீழம் என்று உளறுவதை விடுங்கள். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் மூவின மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் புதிய அரசமைப்பை நிறைவேற்றும் பணியை நாம் முன்னெடுக்க வேண்டும்." – என்று இப்போது கூறுகின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நல்லது. இன்ன பெயரில்தான் அரசமைப்பு அமைய வேண்டும் எனத் தமிழ்க் கூட்டமைப்போ, சுமந்திரனோ வலியுறுத்தவில்லை.

"மாகாணங்களுக்கு அல்லது பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அந்த அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறவோ, பறிக்கவோ, தான் பிரயோகிக்கவோ முடியாததாக அது இருக்க வேண்டும். அப்படி இருக்குமானால் அதுவே சமஷ்டிப் பண்பியல்பு. அந்தப் பண்பியல்புடனான புதிய அரசமைப்பு வருமானால் அதை ஏற்போம்." என்று தான் சம்பந்தன் – சுமந்திரன் இணை கூறி வந்தனர்; கூறி வருகின்றனர்.

அத்தகைய பண்பியல்புகளுடனான ஓர் அரசமைப்புக்கு என்ன பெயராவது வைத்துவிட்டு அதைக் கொடுப்பதற்குத் தாங்கள் தயாரா என்பதை ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்த வேண்டும்.

சுமார் நான்கு ஆண்டு காலம், அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் மரதன் அமர்வுகளை நடத்தி, 'மலையைக் கொல்லி எலியைப் பிடித்த மாதிரி' ஓரிரு அறிக்கைகளை சமர்ப்பித்து விட்டு *"புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்டவல்லுநர்களின் உத்தேசவரைவுத் திட்டத்தை மாத்திரமே நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். இனித்தான் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகள் ஆரம்பமாகவுள்ளன."* என்று இப்போது கயிறு விட்டிருக்கின்றார் ரணில்.

"இதுவரை நடந்து அரசமைப்பு உருவாக்கத்துக்கான பூர்வாங்கப் பணிகள்தானாம். இனித்தான் அரசமைப்பு உருவாக்க வேலைகளே தொடங்கவே இருக்கின்றன." என்பதுதான் ரணிலின் வாதம்.

அப்படியானால் – அது உண்மையானால் – இன்னும் அரசமைப்பு உருவாக்கத்துக்கான பூர்வாங்க நடவடிக்கையே இன்னும் ஆரம்பமாகவேவில்லை என்றே அர்த்தம். ஆரம்பமாகாத நடவடிக்கை தோற்றுவிட்டதாகக் கருதி சுமந்திரன் அரசியலைத் துறக்க வேண்டியதில்லை அல்லவா?

இனித்தான் ரணில் ஆரம்பிக்கப்போகும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் ஈடுபடுவதற்காக சுமந்திரன் அரசியலில் இருக்க வேண்டும் அல்லவா?

தானாடாவிட்டாலும் சதை ஆடும் என்பார்கள். சுமந்திரனுக்காக இதையாவது ரணில் செய்யாவிட்டால், அவருக்கு சுமந்திரன் செய்த உதவிகள், ஒத்தாசைகள், இடுக்கண் களைந்த நட்புரிமை நடவடிக்கைகளுக்கு அவர் வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும்?

-மின்னல்-

தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிக்கப்படுகின்றனர். அடிமைகளாகவே அவர்கள் நடத்தப்படுகின்றனர். நாட்டில் வாழும் ஏனைய மக்கள் அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்நிலைமை மாறவேண்டும். அதேபோல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ட அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். இக்கோரிக்கையை இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை நீதியானதாகும். அதைக் கோரி அவர்களாலும், அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வரும் போராட்டங்களும் நியாயமானவையாகும். எனவே, தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை இலகுவில் நிராகரித்து விடமுடியாது. அதைப் புறந்தள்ளி விட்டு அரசியல்வாதிகளாலும் பயணிக்கமுடியாது.

நாட்டில் இன்று என்ன நடக்கின்றது? இன்று நேற்று அல்ல 200 வருடகால வரலாற்று முழுவதிலும் மலையக மக்களுக்கு இங்கு துரோகங்களே இழைக்கப்பட்டன. பிரஜாவுரிமை பறிப்பு, நாடுகடத்தல், கல்வியில் புறக்கணிப்பு எனப் பல விடயங்களைக் குறிப்பிடலாம்.

இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்துவந்து சுமார் 100 தொழிலாளர்கள் இலங்கையிலுள்ள துறைமுகத்தில் இறங்கினால், பெருந்தோட்டங்களுக்கு நடைபயணமாகச் செல்லும் போது மலேரியா உட்பட ஏனைய நோய்த் தாக்கங்களுக்குள்ளாகி 50 பேர் உயிரிழக்க நேரிடும்.

தோட்டப் பகுதிகளுக்குச் சென்று உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும்போது 25 பேர் வரை பல்வேறு காரணங்களால் உயிரிழக்க நேரிடும். 25 பேர் மட்டுமே உயிருடன் எஞ்சுவார்கள் எனப் பத்திரிகை யொன்றில் தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறு வலிகளை சுமந்து வந்த மக்கள் இங்கு வஞ்சிக்கப்படுகின்றனர்.

மலையகத்தில் வறுமை தலைவிரித்தாடுகின்றது. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது. தனிநபர் வருமானமும் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

நான்கு பேர்கொண்ட குடும்பமொன்று அடிப்படைதேவைகளைப் பூர்த்திசெய்துகொண்டு வாழ்வதற்கு 54 ஆயிரத்து 990 ரூபா அவசியம் என அரசபுள்ளிவிபரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆனால், தோட்ட மக்களுக்கு இத்தொகையில் இரண்டிலொரு பங்கே கிடைக்கின்றது.

இதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வாழ்வது? மொத்த வருமானத்தில் ஏனைய மக்கள் 35 சதவீதத்தை உணவுக்காக செலவிடும் நிலையில், மலையக மக்கள் 51 சதவீதத்தை அதற்காக செலவிடுகின்றனர். அம்மக்களுக்காக ஏனைய சலுகைகள் எதுவும் இல்லை.

மந்தபோசனையுடன் குழந்தைகள் பிறக்கின்றனர். கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பல பிரச்சினைகள் உள்ளன.

தோட்டப்பகுதிகளில் வாழ்பவர்களில் 47 வீதமானோர் சாதாரண தரப் பரீட்சை எழுதவில்லை. 12.8 வீதமானோரே உயர்தரம் பயின்றுள்ளனர். 2 வீதமானோரே பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

வருடாந்தம் சுமார் 28 ஆயிரத்து 700 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர். அப்படியானால் தோட்டப் பகுதிகளிலிருந்து 120 மற்றும் 150 மாணவர்களே பல்கலைக்கழகம் செல்கின்றனர். சனத்தொகை விகிதத்துடன் ஒப்பிட்டால் இது மிகவும் குறைவான சதவிகிதமாகும்.

இப்படி கல்வி, சுகாதாரம், தாய்மொழி, போக்கு என அனைத்து வழிகளிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எதற்காக இந்தப் பாகுபாடு?

எனவே, மலையக மக்களின் வாழ்வாதார உரிமைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். அம்மக்களை வாக்களிப்பு இயந்திரமாக மட்டும் பயன்படுத்தக்கூடாது.

ஏனைய மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும், சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்.

கொழும்பில் ஹோட்டலில் வேலை செய்வதற்கும், மலசலகூடம் கழுவுவதற்கும், வீட்டு வேலைசெய்வதற்கும் மட்டும் மலையக இளைஞர்களைத் தேடாமல், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறைந்தபட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும்.

அரச நிர்ணயங்களுக்கு அமைய அவர்களுக்கு சுமார் 1,291 ரூபா வழங்கப்படவேண்டும் – என்றார். (ஐ)

3 மாதங்களாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணிகுற்றம்சுமத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி இறுதியாக கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி நாடாளுமன்றுக்குச் சமுகமளித்திருந்தார்.

இலங்கையின் அரசமைப்பின் படி மூன்று மாதத்துக்கொருமுறை ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு வருகை தரவேண்டும். எனினும் ஜனாதிபதி தற்போது மூன்று மாதத்துக்கு மேலாக நாடாளுமன்றுக்கு சமுகமளிக்கவில்லை. எனவே இது தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?–என்றார்.

இதற்குப் பதிலளித்த அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ)

நுண்கடன் நிறுவனங்களால் வடக்கு-கிழக்குக்கே பாதிப்பு

சபையில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

வடக்கு-கிழக்கில் நுண்கடன் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்வதற்கு மாவட்ட செயலகங்களில் விசேட அலுவலகங்களை அமைக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க சபையில் கோரிக்கை விடுத்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் நுண்கடன்களை மீளச்செலுத்த முடியாது 60 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்படும் மக்களை நுண்கடன் நிதியங்களிடமிருந்து பாதுகாக்க அரசு வேலைத்திட்டங்களை உருவாக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடன்நெருக்கடியினால்வடக்கு-கிழக்கு மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் மாத்திரம் கடன் நெருக்கடியினால் 60 பேர் வடக்கில் தற்கொலை செய்துள்ளனர்.கடன்நிறுவனங்கள்கடன்களைத்திரும்பப் பெற்றுக்கொள்ள மக்களின் சொத்துக்களைச் சூறையாடுவதுடன் பாலியல் இலஞ்சம் கோரும் நிலைமையும் காணப்படுகிறது.

நாடு முழுவதிலும் ஒரு மில்லியனுக்கும் அதிகான மக்கள் பெரும் கடன் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக வடக்கு-கிழக்கில் பெருமளவானவர்கள் கடன்களை மீளச்செலுத்த முடியாது பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். தற்கொலை செய்வது மாத்திரமன்றி, தமது சொத்துக்களை விற்பனை செய்யும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

சில நுண்கடன் நிதியங்களின் பிரதிநிதிகள் பாலியல் லஞ்சம் கோரினார் என்றும் முறைப்பாடுகள் உள்ளன. யுத்தம் நிகழ்ந்த காலத்தில் கடன் நிறுவனங்கள் வடக்கு-கிழக்குக்கு நுழையமுடியாதபோதும், யுத்தத்தின் பின்னர் அவர்கள் வேண்டியளவு கடன்களை வழங்கி மக்களைச்சிக்கல்களுக்குள்தள்ளியுள்ளனர்.

பொறுப்புள்ள அரசு என்ற வகையில் அந்த மக்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? முதலில் இந்த நுண்கடன் நிறுவனங்களை முழுமையாக நிறுத்தவேண்டும்.

கடன்பிரச்சினைதொடர்பில்முறைப்பாடு செய்வதற்கு கடன் இணக்க சபைகளின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். அது மாத்திரமன்றி முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு மாவட்ட செயலகங்களில் தனியான அலுவலகங்களை அமைப்பதற்கும் நிதியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ஐ)

நுண்கடனால் நாசமாகும் மக்களின் பொருளாதாரம்

சிறிதரன் எம்.பி. விசனம்

கொழும்பு, ஜன. 25

நுண்நிதி கடன் மூலம் மக்களின் பொருளாதாரம் சுரண்டப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

எனினும் இந்த விடயம் தொடர்பில், இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் தாயகப்பகுதிகளில் யுத்தத்தின் வடுவிலிருந்து மீளாத மக்களிடம் ஆசை வார்த்தைகளைக்கூறி இவ்வாறானநடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுகின்றன.

கடன்சுமைதாங்க முடியாது பலர் தற்கொலைசெய்துகொள்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பேசப்படுகின்றது. ஆனால் இதுவரை தீர்வேதும் எட்டப்படவில்லை-என்றார். (ஐ)

யாழ். மாநகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

முதல்வரிடம் உறுதியளித்தது பிரிட்டன் குழு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட்டின் அனைத்துவித செயற்பாடுகளுக்கும் தமது ஒத்துழைப்புக்களைத் தொடர்ந்து வழங்கத் தயாராக இருப்பதாக பிரிட்டன் வெளிவிவகாரப் பிரிவின் தெற்காசியத் திணைக்களத்தின் தலைவரும் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளருமான பர்கஸ் ஓல்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஆட்சிமாற்றம் குறித்து யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்டுக்கும், பிரிட்டன் உயரதிகாரி பர்கஸ் ஓல்ட்க்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு முதல்வர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடந்தது.

இதன்போது, அண்மையில் இடம்பெற்ற ஆட்சிமாற்றம் குறித்தும் அதன் பின்னரான நிலைமைகள் குறித்தும் தூதுவர் வினவினார்.

இதேவேளை, அரசியல்தீர்வு விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் நிலைப்பாடுகளை முதல்வர் விளக்கியிருந்ததுடன், நாட்டில்ஏற்பட்ட ஜனநாயக மறுப்பு குறித்தும் அதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்ட விதம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

மேலும், தமிழ் மக்கள் மிக நீண்டகாலமாக அரசியல்தீர்வை எதிர்பார்த்துகாத்திருக்கின்றார்கள் எனவும், ஆட்சி மாற்றத்தினால் யாழ். மாநகரில் இடம்பெறவிருந்த பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டன என்றும், தற்போது அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் முதன்மைச் செயலர் பவுல் கிறீன், யாழ். மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன், பிரதி ஆணையாளர் எஸ். சீராளன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

நாட்டில் நெசவுத் தொழிலை மேம்படுத்தப் பொறிமுறை!

கொழும்பு, ஜன. 25

பல தசாப்தங்களின் பின்னர் இலங்கையின் புடைவைத் தொழிலையும் நெசவுத்துறையையும் பெரியளவில் மேம்படுத்தும் வகையில் இந்த வருடம் நவீன தொழில்நுட்பங்களை அந்தத்துறையின் விருத்திக்காக புகுத்த கைத்தொழில் வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் உள்ளூர் கைவினைஞர்களும், நெசவு வடிவமைப்பாளர்களும் உலகளாவிய தொழில்நுட்பத்துடன் போட்டி போடக்கூடிய வாய்ப்பை அமைச்சு உருவாக்கி வருகின்றது.

'நெசவுத்தொழிலில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்தி நெசவு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்' என்று இந்த துறைக்கு பொறுப்பான அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழான பல்வேறு நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் அமைச்சில் நேற்றுக் காலை இடம்பெற்ற போதே, அமைச்சர் பதியுதீன் இந்தத் தகவலை வெளியிட்டார் .

இந்தக்கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் கே.டி.என் .ரஞ்சித் அசோக, மேலதிக செயலாளர் எம் .தாஜுடீன், புடைவை திணைக்கள பணிப்பாளர் திருமதி. கிறிஷ்ணமூர்த்தி ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

சாதாரண கைத்தறி உற்பத்தியாளர்கள் நெசவு உற்பத்தியை துரிதப்படுத்துவதற்காக ஜக்காட் இயந்திரங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வகையான இயந்திரங்கள் வழங்கும் வலுக்கள் மூலம் கைத்தறி இயந்திரங்களின் வேகம் அதிகரிக்கப்பட்டு, நெசவு டிசைன்கள் கூட்டாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. எனினும் இதன் இயக்கத்திற்கு பழைய வகையிலான தொடுகை அட்டை முறையே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இலங்கையின் நெசவு வடிவமைப்பாளர்கள் இதுவரை காலமும் ஜக்காட் இயந்திர கைத்தறிகளின் பயன்பாட்டிற்காக பழைய தொடுகை முறையையே பயன்படுத்தி வந்தனர். இருந்த போதும் இன்றைய கைத்தறி சந்தையின் துரித வளர்ச்சி போக்கிற்கு ஏற்ப பழைய முறையிலான இந்த இயந்திராதிப்பாவனை ஈடுகொடுக்க முடியாத நிலையே உருவாகியுள்ளது.

எனவே எனது அமைச்சின் கீழான புடைவை மற்றும் நெசவுத் துறை திணைக்கள பிரிவான பழைய முறையை மாற்றியமைத்து, கணினி மயப்படுத்தப்பட்ட டிஜிற்றல் முறையை உட்புகுத்தியுள்ளோம். இந்த நவீன தொழில்நுட்பம் மூலம் கைத்தறி உற்பத்தியும் வடிவமைப்பு முறைகளும் மேம்பாடு அடையும் இவ்வாறு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார் .

இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவனம் முதன் முதலாக ரத்மலானையில் உயர் தர டிஜிற்றல் ஜக்காட் முறையை அறிமுகப்படுத்தவுள்ளது.இந்த புதிய திட்டத்திற்கு 20,000 அமெரிக்க டொலர் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நவீன முறையானது செயன்முறையாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு துணை புரிவதோடு தேசிய மட்டத்தில் கைத்தறி உற்பத்தியாளர்களை பயிற்றுவிப்பதற்கு உதவு கின்றது. தனியார் துறையை சேர்ந்த விநியோகஸ்தர்கள் இந்த இயந்திரங்களை இறக்குமதி செய்து உள்நாட்டு நெசவுக்கைத்தொழிலை ஊக்குவிக்க இந்த புதிய முறையானது உத்வேகம் வழங்குகின்றது.

புடைவைத் திணைக்களம் எட்டுக்கும் அதிகமான டிஜிற்றல் ஜக்காட் இயந்திரங்களை இறக்குமதி செய்து ஒவ்வொரு மாகாணங்களுக்கும் வழங்கி அங்குள்ள உற்பத்தியாளர்களை பயிற்றுவிப்பதற்கும் மாகாணங்களில் உள்ள இயந்திராதி இறக்குமதியாளர்களை ஊக்குவிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் நெசவுத்தறி துறையானது குறைந்த செலவிலான கூடுதலான வருமானத்தை ஈட்டும் தொழிலாக கருதப்படுகிறது.

அதுமாத்திரமன்றி அதிகமான வேலைவாய்ப்புக்களை வழங்கும் இந்த துறையில் 12,000இற்கும் மேற்பட்டோர் தம்மை ஈடுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கஸ்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

ஜெனீவாவில் என்ன செய்வது?

"ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஊடாகவும் பிற தளங்கள் ஊடாகவும் பல்வேறு வாக்குறுதிகளை இலங்கை அரசு வழங்கியுள்ளது. ஆனால் அவற்றை அது நிறைவேற்றவேயில்லை. எனவே, அடுத்த மாதம் ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதே வேளை இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தம்மைச் சந்தித்த பிரிட்டனின் வெளிவிவகாரப் பிரிவின், தெற்காசியத் திணைக்கள ஒருங்கிணைப்பாளரும் இந்திய விவகாரங்களுக்கான இணைப்பாளருமான பர்கஸ் ஒல்ட்டிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இந்தத் தகவல் இடம் பெற்றுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக 2015 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகங்களை அதற்கான இரண்டு ஆண்டுகள் காலக்கெடுவில் இலங்கை நிறைவேற்றாத நிலையில், அவற்றை நிறைவேற்ற மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கும் தீர்மானம் 2017 மார்ச் அமர்வில் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு கால அவகாச நீடிப்புப் பெறும் இலங்கையின் எத்தனத்துக்கு கூட்டமைப்பும் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கியது என்ற ஒரு குற்றச்சாட்டு அச்சமயம் எழுந்திருந்தது.

அந்தப் பின்புலத்திலேயே இரண்டாவது கால அவகாசமும் பயனற்று முடிந்த சூழலில் மீண்டும் அடுத்த மாதம் ஆரம்பமாவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடருக்கு இலங்கை விவகாரம் வருகின்றது.

இந்த அமர்வில், இதுவரையான இரு தீர்மானங்கள் தொடர்பிலும் காத்திரமான நடவடிக்கை ஏதும் எடுக்காமல் காலத்தை வீணே இழுத்தடித்து, வாய்ப்புகளை விரயம் செய்து, தானும் சேர்ந்து அனுசரணைப் பணி வழங்கி நிறைவேற்றிய தீர்மான வாசகங்களை நடைமுறைப்படுத்தாமல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி வரும் இலங்கை சம்பந்தமாக, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் எத்தகைய நடவடிக்கையை எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கூட்டமைப்பு இன்னும் கூட வெளிப்படையாகத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழரின் பிரதிநிதிகள் தாமே என்று கூறும் கூட்டமைப்பு இவ்விடயத்தில் இம்முறை ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் தாம் எதிர்பார்ப்பது யாது என்பதைத் தெளிவுபடுத்தவேயில்லை.

ஐ.நா. அமர்வில் இலங்கையை சர்வதேச சமூகம் இறுக்க வேண்டும் என்ற சாரப்பட மேலோட்டமாகக் கருத்துக் கூறுவதோ, இலங்கைதொடர்பான ஐ.நா. தீர்மானம்தொடர்ந்துமுன்னெடுக்கப்பட வேண்டும் என்ற சாரப்பட வார்த்தைகளில் விளையாடுவதோ போதுமானவையல்ல.

அவை, மீண்டும் இலங்கைக்குக் கால அவகாசத்தை வாங்கிக் கொடுக்கும் ஒரு தீர்மானத்துக்கான பிள்ளையார் சுழியோ என்ற சந்தேகத்தைத் திரும்பவும் ஏற்படுத்தி விடும்.

இலங்கை விடயத்தில் யுத்தக் குற்றங்களுக்கு நீதி, நியாயமான முறையில் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உட்பட காத்திரமான அம்சங்கள் பல அடங்கிய முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையும் சேர்ந்து அனுசரணை வழங்கிய தீர்மானங்களின் மூலம் இரண்டு, இரண்டாக மொத்தமாக நான்கு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கியாயிற்று. இதற்குப் பின்னர் யாது என்பதே கேள்வி. இன்னொரு இரண்டு வருட கால அவகாசம் என்ற பெயரில் எதுவும் செய்யாமல் இலங்கை மீளவும் நழுவிச் செல்வதற்கு இடமளிக்கப் போகின்றோமா என்பதே வினா.

இது தொடர்பாகத் தனது எதிர்பார்ப்பு, தனது வழிகாட்டல் யாது என்பதைத் தமிழ்க் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்துக்குத் தெளிவான வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். அது மாத்திரமல்ல, அதனைத் தனது மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

ஏற்கனவே, நல்லாட்சி அரசை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் காப்பாற்றுவதற்காக அதனுடன் சேர்ந்து அதற்குக் கால அவகாசம் வழங்கும் மறைமுகத் திட்டத்துக்குக் கூட்டமைப்பு உதவியது என்ற குற்றச்சாட்டு, கூட்டமைப்பின் அரசியல் எதிரிகளால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டமையும் –

அதை எதிர்கொண்டு சமாளிப்பதற்குக் கூட்டமைப்புத் தலைமை படாதபாடு பட்டமையும் –

2017 ஆம் ஆண்டின் அனுபவங்களாகும்.

திரும்பவும் தேவையற்ற அத்தகைய சர்ச்சை ஒன்று 2019 இலும் எழுவதைத் தவிர்ப்பது இன்றைய நிலையில் தமிழ்க் கூட்டமைப்புக்கும் நல்லது. ஒட்டுமொத்த தமிழர் தரப்புக்கும் நல்லது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமரச முயற்சிகளின் வரலாற்றில் மீண்டும் ஒரு தடவை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் மோசமாக ஏமாற்றப்பட்டு புறம் ஒதுக்கப்படும் நிலைமைக்குத் தமிழினம் பைபோது தள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தச் சமயத்தில் அரசியல் கருத்து நிலைப்பாடுகள், முரண்பாடுகள், கட்சி வேறுபாடுகளைக் களைந்து தமிழர்கள் ஒன்றுபட்டு ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலை எதிர்கொள்வதே மிக முக்கியமானதாகும்.

யுத்தக் குற்ற விடயங்கள் உட்பட்ட இந்த விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நுணுக்குக் காட்டி அவதானிப்பு மற்றும் கடும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து இலங்கை தப்பவும் கூடாது. அதேசமயம் மேலும் கால அவகாசம் பெற்று நழுவிச் செல்லவும் இடமளிக்கவும் கூடாது. சர்வதேசத்தின் காத்திரமான கண்டிப்பு நடவடிக்கைக்குள் அது சிக்கவும் வேண்டும்.

அதற்கான திட்டம் ஒன்றைத் தமிழர் தரப்பு நிலைப்பாடாக கூட்டமைப்பு முன்வைக்க வேண்டும்.

மன்னார் ஊட்டக்குளத்துக்கு நீர் இல்லை: நெற்செய்கை பாதிப்பு; விவசாயிகள் கவலை

மன்னார்,ஜன.25

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேசப் பகுதியில் அகத்தி முறிப்பு பெரிய குளத்தின் கீழ் விவசாயம்செய்யும் விவசாயிகள் அக் குளத்தில் போதிய நீர் இருந்தும் ஊட்ட குளத்துக்கு நீர் பாய்ச்சாத காரணத்தினால் அதிகமான விவசாயம் பாதிப்புக்குள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் சம்பந்தமாக தெரியவருவதாவது – மன்னார் முசலி பிரதேச பகுதிக்குள் கோணாங்குளம் மற்றும் அந்தோனிமெரிஞ்சிகுளம் ஆகியவற்றின் கீழ் சுமார் 120 ஏக்கருக்கு மேல் 92 விவசாயிகள் 2018/2019 ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

இவ் ஊட்டகுளங்களுக்கு அகத்திமுறிப்பு பெரிய குளத்திலிருந்தே நீர் பாய்ச்சப்படுகிறது. இந்த நீரைக் கொண்டே தங்களால்மேற்கொள்ளப்படும்விவசாயத்தை தக்க வைக்க முடியும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால்தற்பொழுது அகத்தி முறிப்பு பெரிய குளத்தில் ஏழு அடிக்கு மேல் போதிய நீர் இருக்கின்றபோதும் இக் குளத்துக்கு அருகில் உள்ள குளங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு அவர்க ளின் விவசாயம் பாதுகாக்கப்படுகின்ற போதும் கோணாங் குளத்துக்கு பெரிய குளத்திலிருந்து நீர் விநியோகம் செய் யப்படாமையால் ஊட்டக்குளத் துக்கு கீழ் விவசாயம்செய்த வேளாண்மை பாதிப்பு அடையும் அபாயத்தை நோக்கியுள்ளதாக பாதிப்புக்குள்ளாகி வரும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றும் கவனிக்கப்படுவதில்லையென முத்தரிப்புத் துறை கிழக்கு கமக்கார அமைப்பு கவலை தெரிவிக்கின்றது.(எ – 112)

கிறிஸ்தவ தேவாலயத்தை உடைக்க வவுனியா நகரசபை வழக்கு தாக்கல்

வவுனியா சின்னக்குளத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை இடித்து அகற்றுவதற்கு வவுனியா நகரசபை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

இந்த கிறிஸ்தவ தேவாலயம் வவுனியா நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நிலையில் தேவாலயம் கட்டுமானப்பணிகளின் போது நகரசபையின் அனுமதியைப் பெறவில்லை எனத் தெரிவித்தே நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயத்துக்கு எதிராக விதிமுறைகளை மீறியதாக தொடுக்கப்பட்ட வழக்கு குறித்து கருத்து தெரிவித்த இந்த தேவாலயத்தின் தலைமைப் போதகர்,

தேவாலயத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பாக வவுனியா நகரசபையின் அனுமதி கோரலுக்காக கடந்த 2010 ஆம் ஆண்டு சகல ஆவணங்களும் சமர்ப்பித்திருந்தோம். கடந்த எட்டு ஆண்டுகளாக அனுமதி வழங்காமல் இழுத்தடித்த நகரசபை திடீரென தேவாலயத்தை இடிப்பதற்கு நீதிமன்ற நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இவ் வழக்கு சம்பந்தமாக எமது சட்டத்தரணி ஊடாக அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளோம்.

வவுனியா நகரில் 400க்கு அதிகமான கட்டடங்கள் நகரசபையின் அனுமதி இன்றியே கட்டப்பட்டுள்ளன. வவுனியா நகரிலிருந்து நகரசபை எல்லையில் எவருக்கும் தொந்தரவு இல்லாத இடத்தில் அமைந்துள்ள எமது தேவாலயத்தை இடிக்க நகரசபை முயற்சி செய்வது எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது சம்பந்தமாக நகரசபைக்கு எதிராக எமது சட்டத்தரணி ஊடாக உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

அதன் அடிப்படையில் நகரசபை நிர்வாகத்தின் மீது ஒரு முழுமையான விசாரணையை உள்ளூராட்சி அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எமது தேவாலயம் குறிவைக்கப்பட்டதானது அரசியல் ரீதியான நோக்கம் கொண்டதாக இருக்கலாம் என்ற சந்தேகமும் இருப்பதாக தெரிவித்தார். (எ – 100)

தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.25

கடந்த 13 ஆம் திகதி தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்புக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது படகு விபத்துக்குள்ளாகி ஒரு மீனவர் பலியானதுடன் எட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் நிதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிவான் மீனவர்கள் எட்டுப் பேரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை மீட்பதற்காக இந்தியாவில் இருந்து வருகை தந்த மீட்புக் குழுவினரும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர். இதன் போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

வவுனியாவில் கடும் பனி மூட்டம்; சாரதிகள் உட்பட பலரும் அவதி

வவுனியாவில் நேற்று அதிகாலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்திருந்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 9 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏ9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 8 மணிவரை ஒளியைப் பாய்ச்சியபடி சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அண்மைக்காலமாக குளிருடன் கூடிய காலநிலை வவனியாவில் காணப்பட்ட போதிலும் நேற்றைய தினம் போன்று கடுமையான பனி மூட்டம் காணப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ – 100)

இந்து சமயப் பேரவையில் கருத்துக் களம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் மாதாந்த கருத்துக் களம் நிகழ்வு, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, பேரவையில் அதன் செயலாளர் சி.சக்திகிரீவன் தலைமையில் நடைபெறும்.

"சம காலத்தில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற விடயம் தொடர்பில் கருத்தாடல் இடம்பெறும். (இ)

நாளை

26.01.2019
சனிக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் மு.இ 9.23 வரை
திதி : ஷஷ்டி மு.இ 10.59 வரை
சுபநேரம் : 3.36 - 5.06 வரை
இராகுகாலம் : 9.36 - 11.06 வரை

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 10 ஆவது தடவையாக இன்று ஆரம்பம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி பத்தாவது தடவையாக இன்று 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழ் மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை இன்று காலை 9 மணிக்குயாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனால்ட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சர்வதேச வர்த்தக கண்காட்சி தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு யாழில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இச் சந்திப்பின் போது யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில்துறை மன்றத் தலைவர் கே. விக்கினேஸ் கருத்து வெளியிடுகையில் –

யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி வடக்குக்கான நுழைவாயில் என்ற பெயருடன் உள் நாட்டு, வெளிநாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகர்கள், வர்த்தக நிறுவனங்கள் ஒன்று கூடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றம் பலதரப்பினர்களுடனும் இணைந்து ஏற்பாடு செய்த இக் கண்காட்சி பத்தாவது ஆண்டாகவும் இம்முறை நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களைப் போல உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக கூடங்கள் அமையப் பெற்றுள்ளன. ஆனால் இந்தியாவில் இருந்து வருகின்ற வர்த்தக நிறுவனங்கள் பலவும் இலங்கையில் அண்மையில் ஏற்பட்டஅரசியல் நெருக்கடிகள் காரணமாக இம் முறை வருகை தரவில்லை.

ஆனாலும் இந்தோனேசியாவில் இருந்து பல வர்த்தக நிறுவனங்கள் வருகை தந்து தமது கூடங்களை அமைக்க உள்ளன.

இக்கண்காட்சிக்யைப்பார்வையிடுகின்ற பாடசாலை மாணவர்களுக்கு இலவசம் என்பதுடன் ஏனையவர்களுக்கு கட்டணம் அறிவிடப்பட இருக்கின்றது.

மேலும் கடந்த காலங்கள் போன்று பல ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் இம் முறையும் வருவார்களென எதிர்பார்க்கின்றோம்.

இங்கு தொழில் வழிகாட்டல்கள்,விசேடஉணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், வீடுகளுக்குத் தேவையான அனைத்து உபகரணங்கள்,கட்டட நிர்மாணப் பொருள்கள் மற்றும் அழகு சாதனங்கள்,அழகு சாதன மற்றும் அழகுக் கலை சேவைகள், சிறுவர்களுக்கான விசேட நிகழ்வுகள்,கல்வி ஆலோசனைகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் என்பன இக் கண்காட்சியில் பிரதான அம்சங்களாக இடம்பெற்றுள்ளன.

இக் கண்காட்சியானது பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் உள்ளூர் உற்பத்தியளர்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது.

ஆகவே,சரியானமுறையில் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

(ஏ)

பொலித்தீன் அற்ற நகராக மாறுகின்றது சாவகச்சேரி

(எஸ். நிதர்ஷன்)

சாவகச்சேரி,ஜன.25

எதிர்வரும் 2020ம் ஆண்டு சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனை முற்றாக இல்லாமல் செய்யப்படும் என சாவகச்சேரி நகராட்சி மன்ற பொதுச்சுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொலித்தீன் அற்ற நகரம் செயற் திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பகுதியில் உணவகங்களில் இருந்தே அதிகளவான பொலித்தீன் கழிவுகள் அகற்றப்படுகின்றன. அதனைக் கட்டுப்படுத்த கடந்த முதலாம் திகதி முதல் சாவகச்சேரி நகரசபைக் குட்பட்ட உணவகங்களின் பொலித்தீன் கழிவுகளை தனியாக பிரித்து அகற்றுகின்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் உணவக உரிமையாளர்கள் பொலித்தீன் பாவனையை படிப்படியாக குறைத்து வாழை இலை போன்றவற்றை பயன்படுத்த ஆரம்பித்து எமது செயற்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

மேலும் நகரப்பகுதி சந்தைப் பகுதி ஆகியவற்றில் பொலித்தீன் கழிவுகளை மட்டும் சேகரிப்பதற்கு விசேட கழிவுதொட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி எமது பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொலித்தீன் தொடர்பான விழிப்புணர்வுசெயற் திட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த பொலித்தீன் அற்ற நகரம் செயற் திட்டத்துக்கு வர்த்தகர்கள் பொதுமக்கள் சிறந்த ஒத்துழைப்பை வழங்குகின்றனர். அத்தோடு எமது நகராட்சி மன்ற தவிசாளர் உறுப்பினர்கள் அனைவரும் பூரண ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குகின்றனர்.

இதனால் எமது சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் 2020 ஆம் ஆண்டு பொலித்தீன் பாவனை முற்றாக இல்லாமல் செய்யப்படும்.

மேலும் பொலித்தீன் பயன்பாட்டையும் விற்பனையையும் எமது பகுதிக்குள் முதலாவதாக முற்றாக நிறுத்துகின்ற வர்த்தகருக்கு விசேட விருதும் ஊக்குவிப்பும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

(ஏ)

மோட்டார் சைக்கிள் எரிப்பு; சந்தேக நபர் கைதானார்

முல்லைத்தீவு,ஜன.25

முல்லைத்தீவு – பாண்டியன்குளம் பகுதியில் கடந்த செவ்வாய் இரவு கடை ஒன்றின் பின்னால் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டது, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாண்டியன்குளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குப் பின்னால் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டுக்குச் சென்ற சமயம் மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அந்தச் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்தியதாக மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தெரிவித்தார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிவதை அவதானித்த அதன் உரிமையாளர் சம்பவ இடத்துக்குச் சென்ற போது அந்த இடத்திலிருந்து தீ வைத்த அந்த நபர் தப்பிச் செல்வதைக் கண்டு பின்தொடர்ந்து துரத்திய போது அந்த நபர் தப்பிச் சென்றுவிட்டார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் மேற்படி நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

17 அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜன. 25

17 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கூடியுள்ளது.

இதன்போதே இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 01.07.2017 முதல் 30.09.2017 வரையான காலப்பகுதியில் 17 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டது.

(ஐ)

யாழில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

யாழ்ப்பாணம்,ஜன.25

போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொடர் நடவடிக்கைகளுக்கமைய பாடசாலை மாணவர்களால் விழிப்புணர்வு பேரணியொன்று யாழில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் இப் பேரணி நடத்தப்பட்டது.

பாடசாலை முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணி சின்னக்கடை வீதியூடாக கடற்கரை வீதியைச் சென்றடைந்து பிரதான வீதியூடாக பாடசாலையை வந்து நிறைவடைந்தது. இப் பேரணியில் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆசிரியரை பதம் பார்த்தது மாணவன் எறிந்த குண்டு!

யாழ்ப்பாணம், ஜன. 25

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலையொன்றின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் குண்டெறிதல் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மாணவன் ஒருவன் எறிந்த குண்டு அங்கு பதிவுகளை மேற்கொண்டிருந்த ஆசிரியரின் காலில் வீழ்ந்தது.

இதனால், ஆசிரியர் காலில் காயமடைந்தநிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ)

ஜெயலலிதாவின் வேதா இல்லத்தை முடக்கியது வருமான வரித்துறை

சென்னை,ஜன.25

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி இருந்ததால் அவரது வேதா இல்லம் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

சென்னையில் உள்ள ஜெயலிதாவின் போயஸ் கார்டன் இல்லம் வருமான வரித்துறையினரால் முடக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா ரூ. 10 கோடிக்கும் மேல் வருமான வரி பாக்கி வைத்திருந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2007 ஆம் ஆண்டு முதலாகவே ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லம் வருமான வரித்துறையின் முடக்கப்பட்டியலில் உள்ள நிலையில் தற்போது அவது வேதா இல்லம் முடக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஜெயலலிதாவின் சொத்துக்கள் முடக்கத்தில் இருந்தாலும் போயஸ் கார்டன் இல்லத்தை நினைவிடமாக மாற்ற எந்த ஆட்சேபனையும் இல்லை என்று வருமான வரித்துறை தெரிவித்துள்ளதாகவும் தகவல் வெளியாகிறது.

தமிழக சட்டமன்றத்துக்கு 2021இல் தான் தேர்தல்

சென்னை,ஜன.25

தமிழக சட்டமன்றத்துக்கு 2021ஆம் ஆண்டு தான் தேர்தல் நடக்கும் என அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்;

சதிகள், சூழ்ச்சிகள் செய்தாலும் அ.தி.மு.க. அரசை வீழ்த்த முடியாது. தமிழக சட்டமன்றத்துக்கு 2021ஆம் ஆண்டுதான் தேர்தல் நடக்கும்.



நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. முழுமையாக வெற்றி பெறும். இடைத்தேர்தல்களிலும் அ.தி.மு.க. தான் வெற்றி பெறும்.

யாரோடு யார் கூட்டணி என்பது உரிய தருணத்தில் தெரிவிப்போம். கூட்டணிக்கான கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் யாருடன் கூட்டணி என்பதை கட்சித்தலைமை முடிவு செய்யும் எனக் கூறியுள்ளார். (எ)

தினகரனுக்கு தொடர்ந்து 'குக்கர்' சின்னமா?

வழங்க மறுக்கிறது ஆணையம்

புதுடில்லி,ஜன.25

டிடிவி தினகரனின் அ.ம.மு.க. கட்சிக்கு குக்கர் சின்னத்தை நிரந்தரமாக ஒதுக்க முடியாது என தலைமை தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணை பொதுச்செயலாளர் தினகரன், சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் சுயேட்சையாக குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனவே, அந்த சின்னத்தை தனது கட்சிக்கு நிரந்தரமாக பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கிடையே, திருவாரூர் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதால், தினகரன் தனது கட்சிக்கு குக்கர் சின்னம் ஒதுக்குமாறு தேர்தல் கமினுக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றில் மனு தாக்கல் செய்தார். இடைத்தேர்தல் மற்றும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட தனது கட்சிக்கு குக்கர் சின்னம் ஒதுக்க வேண்டும் என மனுவில் கூறியிருந்தார். ஆனால் குக்கர் சின்னம் ஒதுக்குவதற்கு அ.தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் டிடிவி தினகரனின் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தலைமைத் தேர்தல் ஆணையம் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், தேர்தல் ஆணையத்தில் உள்ள பொதுவான சின்னத்தை அங்கீரிக்கப்பட்ட கட்சிக்கு மட்டுமே வழங்க முடியும் என்றும், அ.ம.மு.க. அங்கீகரிக்கப்படாத கட்சி என்பதால் குக்கர் சின்னத்தை நிரந்தரமாக ஒதுக்க முடியாது என தெரிவித்துள்ளது. (ஏ)

17 இளம்பெண்கள் மட்டுமே சபரிமலையில் தரிசனம்

திருவனந்தபுரம்,ஜன.25

சபரிமலையில் 17 இளம்பெண்கள் மட்டுமே தரிசனம் செய்தனர் எனப் புதிய ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

சபரிமலையில் மண்டல பூஜை மற்றும் மகரவிளக்கு திருவிழா காலங்களில் 51 இளம்பெண்களும் தரிசனம் செய்தனர் எனத் தெரிவித்த கேரள அரசு அவர்களின் பெயர் விவரம் மற்றும் ஆதார் அட்டை விவரங்களையும் நீதிமன்றுக்கு அளித்த பட்டியலில் குறிப்பிட்டிருந்தது.

இந்த பட்டியல் வெளியானதும் அதில், பல்வேறு முரண்பாடுகள்

இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் சில ஆண்களின் பெயர்கள் பட்டியலில் இருந்தது தெரிய வந்தது.

பட்டியலில் ஏற்பட்ட குளறுபடி கேரள அரசுக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. இதையடுத்து பட்டியலில் உள்ள குளறுபடியை கண்டறிந்து புதிய பட்டியல் தயாரிக்க கேரள அரசு உத்தரவிட்டது.

இதற்காக தலைமை செயலாளர், பொலிஸ் டி.ஜி.பி. ஆகியோர் அடங்கிய புதுக்குழுவும் அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் ஏற்கனவே வெளியான 51 பேர் பட்டியலை ஆய்வு செய்தனர். அதில், 34 பேரை விடுவித்தனர். மீதம் 17 பேரே சபரிமலை சென்று ஐயப்பனை தரிசித்தனர் எனத் தெரிவித்தனர். இந்த புதிய பட்டியல் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்படுகிறது

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு உடனே மின்சாரம் வழங்க உத்தரவு

புதுடில்லி,ஜன.25

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கும்படி தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசால் மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை, சில நிபந்தனைகளுடன் மீண்டும் திறக்க அனுமதி அளித்து தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இதனையடுத்து ஆலையைத் திறக்கவும், மின்சாரம் வழங்கவும் அனுமதி கோரி வேதாந்தா நிறுவனம் சார்பில் தமிழக அரசுக்கு மனு அளிக்கப்பட்டது. ஆனால் தமிழக அரசு எந்த பதிலும் அளிக்கவில்லை.

இதையடுத்து ஆலையைத் திறக்க உத்தரவிடக் கோரி வேதாந்தா நிறுவனம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில், தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டும், ஆலையை திறக்க உத்தரவிடுவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மறுத்து

வருவதாக வேதாந்தா நிறுவனம் கூறியிருந்தது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வேதாந்தா நிறுவனம் சார்பில் தங்கள் தரப்பு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு தமிழக அரசு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. (ஏ)

மம்தா பானர்ஜியை கைவிட்டு ராகுலுடன் இணைந்த குமாரசாமி

பெங்களூர்,ஜன.25

பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்னிறுத்த விரும்புவதாக கர்நாடக மாநில முதலமைச்சர் குமாரசாமி கூறி உள்ளார்.

மேற்கு வங்கத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பா.ஜ.கவுக்கு எதிராக நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் பேசிய கர்நாடக மாநில முதலமைச்சர் குமாரசாமி, பிரதமர் பதவிக்கு மம்தா பானர்ஜி தகுதியானவர் என்றார்.

இந்நிலையில், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தினால், தங்களுடைய மதசார்பற்ற ஜனதா தளம் கட்சி ஆதரவு அளிக்கும் என தற்போது குமாரசாமி கூறியுள்ளார்.

பிரதமர் மோடி ஒரு காகிதப் புலி மட்டுமே. ராகுல் காந்தி அரசியல் முதிர்ச்சி பெற்று உள்ளார். மோடி நன்றாக பேசுகிறார்.

அவரது விளக்க காட்சிகள் நன்றாக உள்ளன. அவர் சமூக ஊடகத்தை பயன்படுத்துகிறார், ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் அவரது சாதனை என்ன? என கேள்வி எழுப்பினார். (எ)

அமெரிக்க வங்கியில் சூடு; சம்பவஇடத்திலேயே 5 பேர் சாவு

மியாமி, ஜன.25

அமெரிக்காவில் உள்ள வங்கியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள மாகாணமான புளோரிடாவில் செப்ரிங் என்ற நகர் உள்ளது. இந்த நகரில் இயங்கி வரும் வங்கி ஒன்றுக்குள் புகுந்த 21 வயது இளைஞர் ஒருவர், திடீரென தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து, வங்கிக்குள் நின்ற மக்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டார். இந்த தாக்குதலில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞரை கைது செய்த பொலிஸார், இந்த கொலைக்கு பின்னணி காரணம் ஏதும் இருக்கிறதா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில், துப்பாக்கி வன்முறை ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு மட்டும் துப்பாக்கி வன்முறையால் 40 ஆயிரம் பேர் அமெரிக்காவில் பலியாகியுள்ளனர். (எ)

நவாஸ் ஷெரீப்பின் உடல்நிலை மோசம்

மருத்துவமனையில் அனுமதிக்க கோரிக்கை

இஸ்லாமாபாத்,ஜன.25

பாகிஸ்தானில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள, நவாஸ் ஷெரீப்பின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஷெரீப்புக்கு, இதய நோயும் உள்ளது. சமீபத்தில், உடல் நிலை மோசமடைந்ததால், சிறையில் இருந்து, லாகூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்ட பின், மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், இதய நோயால் பாதிக்கப்பட்ட ஷெரீப்பின் உடல்நிலை மோசமாக இருப்பதாகவும், சிறையில், சிகிச்சை அளிப்பதற்கு போதுமான வசதி இல்லாததால், உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்றும், அவரது குடும்ப டாக்டர், அத்னான் கான் கூறியுள்ளார்.

வெனிசுலாவில் ஜனாதிபதிக்கு எதிரான மோதல் உச்சக்கட்டம்

16 பேர் உயிரிழப்பு

காரகாஸ்,ஜன.25

வெனிசுலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிரான மற்றும் ஆதரவு போராட்டங்களின் போது ஏற்பட்ட மோதல்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெனிசுலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவின் ஆட்சியில், அரசியல் சர்ச்சைகள் மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்களால் நிலையற்ற தன்மை ஏற்பட்டது. இந்த எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது. எதிர்க்கட்சியால் புறக்கணிக்கப்பட்ட இந்த தேர்தலில், மதுரோ வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானார்.

ஆனால், இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள், நிகோலஸ் மதுரோ பதவி விலக வேண்டும் என்றும், புதிய தேர்தலை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றன. மதுரோவுக்கு எதிரான போராட்டம் மற்றும் ஆதரவு போராட்டங்களால் பல்வேறு பகுதிகளில் மோதல்கள் வெடித்தன.

ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக, ராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன், பொது மக்களையும் வீதிக்கு வந்து போராடும்படி அழைப்பு விடுத்தனர். அதன்பின்னர், போராட்டம் தீவிரமடைந்து பதற்றம் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மதுரோவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடைபெற்றது. இதில் போர்த்துக்கீசர், பரினாஸ், டாச்சிரா, காரகாஸ், அமமேசானஸ் மற்றும் பொலிவார் மாநிலங்களில் நடந்த மோதல்களில் 16 பேர் உயிரிழந்திருப்பதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், சபாநாயகர் ஜுவான் கெய்டோ, தன்னை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பிரகடனம் செய்தார்.

அவருக்கு அமெரிக்கா, கனடா, ஆர்ஜன்ரீனா, பிரேசில், சிலி உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஜனாதிபதி மதுரோ பதவி விலகவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. (எ)



முகத்தை அழகுபடுத்த இரத்தம்

இங்கிலாந்தின் பிரபல பொப் பாடகியும் அழகுக் கலை நிபுணருமான விக்டோரியா பெக்காம், தன்னுடைய இரத்தத்தை பயன்படுத்தி தனது முகத்தை அழகுபடுத்தி வருகிறார்.

1994 இல் உருவாக்கப்பட்ட பொப் குழு 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்'. தற்போது இங்கிலாந்தில் இய்ங்கி வரும் பிரபல பொப் குழுக்களில் ஒன்றாக உள்ளது. இதில் ஓர் உறுப்பினராக உள்ள இங்கிலாந்து கால்பந்து நட்சத்திரம் டேவிட் பெக்காமின் மனைவி விக்டோரியா, தனது மேனி அழகை எவ்வாறு பாதுகாக்கிறார் என்பது குறித்து விநோதமான தகவல் ஒன்றை அளித்துள்ளார்.

தனது இன்ஸ்டாகிராமில் இதுகுறித்து பதிவு செய்துள்ள அவர் 'என்னுடைய இரத்தத்தில் இருந்து செல்களைப் பிரித்து, அந்த செல்களைப் பயன்படுத்தி மாய்ஸ்ட்டரைஸர் தயாரிக்கப்படுகிறது. இந்த மாய்ஸ்ட்டரைஸரைப் பயன்படுத்துவதால் அலர்ஜி ஏற்படும் அபாயம் இல்லை. இதன் மூலம் செல்களை மீண்டும் புதுப்பிக்க முடியும். இதைத் தயாரிக்க 1200 பவுண்டுகள் செலவானது.' எனத் தெரிவித்துள்ளார்.

தஞ்சக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் தாய்லாந்தின் அணுகுமுறையில் புதிய திருப்பம்

பாங்கொக்,ஜன.25

தாய்லாந்திலிருந்து அகதிகள்/தஞ்சக்கோரிக்கையாளர்களை வலுக்கட்டாயமாக நாடுகடத்தும் நடைமுறை நிறுத்தப்படும் என தாய்லாந்து குடிவரவுத்துறையின் தலைவர் சுராசடே ஹக்பார்ன் கூறியுள்ளார்.

அகதிகள்/ தஞ்சக்கோரிக்கையாளர்கள் சார்ந்ததாய்லாந்தின் கொள்கையில் இது மிகப்பெரிய மாற்றமாக பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. அகதிகள் சாசனத்தில் கையெழுத்திடாத தாய்லாந்து, இனி தஞ்சக்கோரிக்கையாளர்கள் விவகாரத்தில் சர்வதேச விதிமுறைகளை பின்பற்றுவதாகவும் உறுதி அளித்துள்ளது.

அண்மையில், சவுதியைச் சேர்ந்த இளம் பெண் ரஹாப் முகமது அல்-குன் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய பயணிக்க இருந்த நிலையில், தாய்லாந்தில் தடுத்து நிறுத்தப்பட்டார்.

பின்னர், கனடா அவருக்கு அடைக்கலம் தந்தது. இந்த விவகாரத்தில் தாய்லாந்து நடந்து கொண்ட விதத்தின் மீது சர்வதேச நாடுகள் கடுமையான விமர்சனத்தை வைத்ததன் தொடர்ச்சியாக தஞ்சக் கோரிக்கையாளர்களின் பிரச்சினையில் 'வலுக்கட்டாயமான நாடுகடத்தல் கிடையாது' என்ற முடிவை தாய்லாந்து எடுத்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதே போல், ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்து அரசியல் அகதி அந்தஸ்து பெற்ற பஹ்ரைன் கால்பந்தாட்ட வீரர் அல் அரைபியை கடந்த நவம்பர் 2018ல் கைது செய்தது தொடர்பாக குடிவரவுத்துறை தலைவர் சுராசடே ஹக்பார்னிடம் கேள்வி எழுப்பப்பட்டபொழுது, அந்த வழக்கு வித்தியாசமானது, அவர் நீதிமன்றத்தில் முறையிடலாம் எனக் கூறியுள்ளார்.

இண்டர்போல் விடுத்த சிவப்பு எச்சரிக்கை அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார் எனச் சொல்லி வந்த தாய்லாந்து, இண்டர்போலின் எச்சரிக்கை அகதிகளை கைது செய்ய செல்லாது என்ற பின்னரும் பஹ்ரைனின் கோரிக்கைக்கு இணங்க அவரை நாடுகடத்த தாய்லாந்து முயன்று வருகிறது.

தாய்லாந்து குடிவரவுத்துறையின் தலைவராக சுராசடே ஹக்பார்ன் நியமிக்கப்பட்டமை முதல், சட்டவிரோத குடியேறிகள் மீதான நடவடிக்கை என பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பல அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் பிணை வழங்கப்படும் என்றும் இப்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிகேடியர் பிரியங்கவைப் பிடிக்க திட்டம் வகுத்துக் கொடுத்தது அரசே!

சாடுகின்றார் விமல் வீரவன்ஸ

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைக் கைது செய்ய இலங்கை அரசே திட்டம்போட்டுக்கொடுத்துள்ளதாகநாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைக் கைது செய்ய பிரிட்டன் நீதிமன்றில் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. வெளிவிவகார அமைச்சு இது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என எமக்கு இதுவரை தெரியாது. ஆனால், வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும், இலங்கை இராணுவத்தினரைக் கைது செய்யுமாறு வெளிநாட்டு நீதிமன்றமொன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதில்லை. அவ்வாறு நாம் கேள்விப்பட்டதுமில்லை. இதுதான் முதன்முறையாகும்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு அரசே அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதேபோல், காணாமற்போனோர் தொடர்பிலான சட்டவரைவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால், சர்வதேச நாடு ஒன்றிலிருந்து இராணுவத்தினருக்கு எதிரான பிடியாணை பிறப்பிக்கும்போது, அந்த நபரை அந்நாட்டுக்கு ஒப்படைப்பதற்கான வழிவகைகளும் திறந்து தான் காணப்படுகின்றன.

அதற்கிணங்க, பிரிட்டன் நீதிமன்றம் பிரிகேடியருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளது. அரசோ, சர்வதேசத்திடம் இராணுவத்தினரை விட்டுக்கொடுக்க மாட்டோம்எனக்கூறிக்கொண்டிருந்தாலும், அரசின் கடந்த காலச் செயற்பாடுகளால், நீதிமன்ற உத்தரவுக்குக் கட்டுப்படவேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாம் அன்று கூறிய போது, அனைவரும் எம்மை பார்த்து சிரித்தார்கள். அவ்வாறு இடம்பெறாது என்றுக் கூறினார்கள். இப்போது, பிரிட்டன் நீதிமன்றம் இலங்கை இராணுவத்தினருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது. இப்படியான ஓர் அரசை இனியும் ஆட்சி பீடத்தில் நீடித்திருக்க நாம் இடமளிக்கக்கூடாது – என்றார். (ஐ)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

VACANCIES

Applications are invited by me up to15th February, 2019from suitably qualified persons for the following posts.

1. TECHNICAL OFFICER (ICT) GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Subjects in the **Science Stream;** Subject combination/s to be decided by the Faculty concerned upon the recommendation of the Department.

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of information Communication and Multimedia Technology/ Information and Communication Technology/ Information Technology or Equivalent.

∗ Preference will be given for who have work experience in ICT

2. TECHNICAL OFFICER (CIVIL) GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Civil Engineering or Equivalent.

3. TECHNICAL OFFICER (ELECTRICAL) GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Electrical Engineering or Equivalent.

4. TECHNICAL OFFICER (MECHANICAL) GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Mechanical Engineering or Equivalent.

5. TECHNICAL OFFICER (CHEMICAL) GRADE III

Qualifications:

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Science Stream**.

AND

(ii) (a) Diploma in **Medical Laboratory Technology**

OR

(b) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Chemistry/Chemical Engineering.

Note: Acceptability of the qualification mentioned in above (ii) (b) shall be judged by the Faculty Concerned.

Salary Scale : U-MT 1(IIIA) Rs.31625-7x300;10x355-37275 p.m.as at 01.01.2020

Selection By : Written and/or practical test and an interview

Age Limit : Age should be not less than 18 years and not more than 45 years.

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website **www.jfn.ac.lk.** Applicants should deposit Rs.100 (for each post) at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No.**"162-1-001-6-0000880".** Applications must accompany a copy of the bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar/Non-Academic Establishments of this University on or before 15.02.2019.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
23.01.2019

பலாலி விமானத் தள ஓடுபாதை அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா

இலங்கை அரசு ஒதுக்கும்

கொழும்பு, ஜன. 25

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசு 200 கோடி ரூபாவை ஒதுக்கவுள்ளது.

பிராந்திய விமானநிலையங்களுக்கு, குறிப்பாக இந்தியாவுக்கான விமானப் பயணங்களை ஆரம்பிப்பதற்கான முதல் நடவடிக்கையாகவே, விமான ஓடுபாதையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு அபிவிருத்தி அமைச்சு, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை, விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கவுள்ளது.

போர்க்காலத்தில் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டு வந்த பலாலி விமான நிலையத்தை, இந்தியாவின் நகரங்களுக்கான பயணங்களை மேற்கொள்ளும் வகையில் பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம், சில ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டது.

இந்த விமான நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு கூட்டு அரசு பதவியில் இருந்தபோது இந்தியா உதவ முன்வந்தது. எனினும், இது தொடர்பான இணக்கப்பாடுகள் எட்டப்படாமல் இழுபறி நிலை காணப்பட்டது. இந்த நிலையில், தற்போது, ஓடுபாதையை அபிவிருத்தி செய்ய இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

பின்னர், பிராந்திய விமான நிலையங்களுக்கான சேவைகளை நடத்தும் வகையில், அனைத்துலக விமான நிலையமாக அதனை அபிவிருத்தி செய்வதற்கான உதவியை இந்தியாவிடம் கோருவதற்கும் இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

83 இலங்கை அகதிகள் நாடு திரும்புகின்றனர்

கொழும்பு, ஜன. 25

தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்ற 39 குடும்பங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்தின் உதவியுடன், தாயகம் திரும்பவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

சுயவிருப்பின் பேரில் 39 குடும்பங்களைக் கொண்ட 83 பேர் இலங்கைக்கு வரவுள்ளனர். இவர் களில் 34 ஆண்களும் 49 பெண்களும் உள்ளடங்குவர். இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்களுக்கு இலவச பயணச்சீட்டு, ஒன்றிணைத்தல் மானிய கொடுப்பனவாக வயது வந்தவர்களுக்கு 10,000 ரூபாவும், வயது குறைந்தவர்களுக்கு 5,000 ரூபாவும், போக்குவரத்துக் கொடுப்பனவாக 2,500 ரூபாவும், உணவு அல்லாத மானிய கொடுப்பனவாக தனிநபருக்கு 5,000 ரூபாவும், குடும்பத்திற்கு 10,000 ரூபாவும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்தால் வழங்கப்படுகின்றது.

மேலும் மீள்குடியேற்ற அமைச்சினால் விமான நிலையத்தில் 5,000 ரூபாவும் தற்காலிகக் கொட்டகைகளுக்காக 25,000 ரூபாவும், உபகரணங்களுக்கு 3,000 ரூபாவும் காணி துப்புரவு செய்வதற்கு 5,000 ரூபாவும் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் வாழ்வாதாரத் திட்டங்களிலும் வீட்டுத் திட்டங்களிலும் தெரிவின்போது சிறப்புப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன என அவர் மேலும் கூறினார். (ஐ)

பௌத்த யாத்திரிகர் விடுதி வவுனியாவில் புனரமைப்பு

வவுனியா, ஜன. 25

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் அமைந்திருந்த யாத்திரிகர் விடுதி புனரமைப்புச் செய்யப்பட்டு பௌத்த இளைஞர் சங்கம் என்ற பெயரில் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நீண்டகாலமாக யாத்திரிகர் விடுதி என்ற பெயரில் செயற்பட்டு வந்த இந்த நிலையம், பௌத்த மதகுருவின் பராமரிப்பிலிருந்து வந்ததுடன், பௌத்த யாத்திரிகர் விடுதி என அழைக்கப்பட்டு வந்தது.

இது தொடர்பாக நகரசபைத் தலைவருடன் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் பௌத்த தேரர்கள் கலந்துரையாடியிருந்த நிலையில், அது துரிதமாக புனரமைப்புச் செய்யப்பட்டு பௌத்த இளைஞர் சங்கம் என்ற பெயரில் பெயர்ப்பலகை நேற்றுமுன்தினம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதையடுத்து வைத்தியசாலை சுற்றுவட்டம், இலுப்பையடி போன்ற பகுதிகளில் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (ஐ)

மைத்திரிக்கு எதிராக வழக்கு: எச்சரிக்கின்றார் பொன்சேகா

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

தன்னுடன்ஏற்பட்டதனிப்பட்டமுரண்பாடு காரணமாகவே தனக்கு அமைச்சு பதவி வழங்கப்படவில்லைஎனவும்,அரசமைப்பிற்கமைய அமைச்சர் பதவி பிரதமரினால் பெயரிட்ட பின்னர் ஜனாதிபதி அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் பதவிகளை அதிகரிப்பதற்காக புதிய யோசனை ஒன்றை எதிர்வரும் காலங்களில்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனைச் சமர்ப்பித்த பின்னர்மேலும்சில அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். அவ்வாறு நியமிக்கப்படவேண்டிய அமைச்சர்களில் எனது பெயரும்ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும். அதற்கமையவும் என்னை அமைச்சராக நியமிக்கவில்லை என்றால் நான் உயர்நீதிமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வேன் -என்றார். =(ஐ)

பேஸ்புக் அதிகாரிகள் மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 25

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முகநூல் நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுக்களை நடத்தியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான முகநூல் நிறுவனத்தின் பொதுக்கொள்கைப் பணிப்பாளர் அன்கி தாஸ் மற்றும் அதிகாரிகள் குழு இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டது.

இணையப் பாதுகாப்பு, பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சந்தை வாய்ப்பு,அதிகரித்து வரும் போலிச் செய்திகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

முகநூல் அதிகாரிகள் குழுவுடன் தாம் தொடர்ந்தும் நெருங்கி பணியாற்றவுள்ளதாக மஹிந்த கீச்சகப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். (ஐ)

அரசியல் கைதிகள் கொலை குறித்து டக்ளஸ் கேள்வி எழுப்பாதமை ஏன்?

நீதி அமைச்சர் தலதா சபையில் கேள்வி

கொழும்பு, ஜன. 25

தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக, டக்ளஸ் தேவானந்தா 1994 ஆம் ஆண்டு அரசிடம், ஏன் கேள்வி எழுப்பவில்லையென நீதி மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடு, அங்குனுகொலபெலஸ்ஸ விவகாரம் தொடர்பில் இரண்டு ஆணைக்குழுக்களினூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில், நேற்று முன் தினம் புதன்கிழமை உரையாற்றிய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற விசாரணைக்கு என்ன நடந்தது எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள மேற்கண்டவாறு கேட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

அங்குனுகொலபெலஸ்ஸ, சிறைச்சாலையில் கடந்த வருடம் தான் அந்தத் தாக்குல் சம்பவம் இடம்பெற்றது.

அதாவது, இலங்கையில் அரசியல் நெருக்கடி இடம்பெற்ற தருணத்தில்தான் அது இடம்பெற்றது. நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அரசு ஒன்று இருக்கவில்லை.

இது தொடர்பில் எமக்கு தெரியவந்தவுடன் இரண்டு ஆணைக்குழுக்களை அமைத்துள்ளோம். தற்போது ஒரு ஆணைக்குழுவின் அறிக்கை வந்துள்ளது. அடுத்த அறிக்கையும் வந்தவுடன் நாம் தெரியப்படுத்துவோம்.

ஆனால், டக்ளஸ் தேவானந்தா 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

எவ்வாறாயினும் அதற்குப் பின்னர் 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசில் உறுப்பினராக இருந்தார். அப்போதே இந்த விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம் என்பதையும் அவருக்கு நாம் நினைவுபடுத்த வேண்டும்– என்றார். (ஐ)

யாழ்.இந்துவுடனான போட்டியில்

மயிரிழையில் வெற்றியை தவறவிட்ட ஸ்கந்தவரோதயா

யாழ்ப்பாணம்,ஜன.25

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு III அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் முதலாவது சுற்றுக்காக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதிய ஆட்டம் சமநிலையில் நிறைவுற்றது.

இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ய இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியினர், மத்திய வரிசையில் அஜிந்தனது அரைச்சதம் மற்றும் கலிஸ்ரனின் 41 ஓட்டங்களுடன் சிறந்த ஓட்டத்தை நோக்கி நகர்ந்தனர்.

அதற்கு மேலதிகமாக, பின்வரிசையில் களம் நுழைந்த ஸ்கந்தாவின் பிரதான பந்துவீச்சாளர் சோபிகன் ஆட்டமிழக்காது சதமொன்றைப் பெற்றுக்கொடுத்தார். இந்த பருவகாலத்தில் இது ஸ்கந்தவரோதய கல்லூரிக்கான முதலாவது சதமென்பது குறிப்பிடத்தக்கது. இவரோடு இணைந்து அமிர்தசாரதன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்திருந்தார்.

சோபிகனது சதத்துடன், 78 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 304 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஸ்கந்தா தரப்பினர் தமது இன்னிங்ஸை இடைநிறுத்தினர். பந்துவீச்சில் சைலரூபனுக்கு 3 விக்கெட்டுகள் கிடைத்திருந்தது.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்துக் கல்லூரி அணியினர் 185 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர். அவ்வணிக்காக மிலுக்சன் 47 ஓட்டங்களையும், ஜங்கரன் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச் சிலும் அசத்திய சோபிகன் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார். சுழற்பந்து வீச்சாளர் பிரசனுக்கும் 4 விக்கெட்டுக்கள் கிடைத்தன.

முதலாவது இனிங்ஸில் 119 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற ஸ்கந்தவரோதயா கல்லூரியினர், யாழ் இந்துக் கல்லூரியை பலோ ஒன் முறையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு பணித்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் கோமைந்தன், ஜங்கரன் மற்றும் தனுக்சன் ஆகியோர் முறையே 47, 35 மற்றும் 39 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க இந்துக் கல்லூரி அணி 186 ஓட்டங்களை பெற்றுக்

சோபிகன்

கொண்டது. இரண்டாவது இனிங்ஸில் பிரசனுக்கு 5 விக்கெட்டுகளும், தனுஜன் மற்றும் டான்சனுக்கு முறையே 3 மற்றும் 2 விக்கெட்டுகளும் கிடைத்திருந்தது.

ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிக்கு 68 என்ற இலகுவான வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதும், ஆட்ட நேரம் நிறைவுக்கு வர வெறுமனே 7 ஓவர்களே எஞ்சியிருந்தது.

வேகமாக ஆடிய ஸ்கந்தா வீரர்கள் அதிரடியாக துடுப்பெடுத்தாடும் முயற்சியில் 5 விக்கெட்டுகளை வேகமாகப் பறிகொடுத்து, 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இதனால், துரதிஷ்டவசமாக 7 ஓட்டங்களால் வெற்றி வாய்ப்பு ஸ்கந்தாவின் கைகளிலிருந்து நழுவியது.போட்டி சமநிலையில் நிறைவுக்கு வந்தபோதும் முதலாவது இன்னிங்ஸ் முன்னிலைக்கான புள்ளிகளை ஸ்கந்தவரோதயா கல்லூரி பெற்றது.

144 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை

பிரிஸ்பேன்,ஜன.25

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான பகல்-இரவு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இனிங்சில் 144 ஓட்டங்களில் சுருண்டது.

இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. ஆஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நேற்று பிரிஸ்பேனில் தொடங்கியது. பகல் - இரவு ஆட்டமாக நடைபெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் சண்டிமல் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதைத்தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் திரின்னே 12 ஓட்டங்களில் கம்மின்ஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித்தலைவர் சண்டிமல் 5, கருணரத்ன 24 , குசால் மெண்டிஸ் 14 , தனஞ்ஜெயா டி சில்வா 5 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

அதன்பின்னர் ரோசன் சில்வாவுடன் விக்கெட் காப்பாளர் டிக்வெல்ல ஜோடி சேர்ந்து நிதானமாக விளையாடினர். நீண்ட நேரம் களத்தில் தாக்குப் பிடித்த ரோசன் சில்வா 56 பந்துகளில் 9 ஓட்டங்கள் எடுத்து ஆட்மிழந்தார்.

ஒருபுறம் டிக்வெல்ல நிலைத்து நிற்க மறுபக்கம் பெரேரா 1, லக்மல் 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் இலங்கை 106 ஓட்டங்களுக்குள் 8 விக்கெட்டுக்களை இழந்தது.

பின்னர் டிக்வெல்ல அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அரைச்சதம் அடித்த டிக்வெல்ல 64 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை அணி 144 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சமீரா ஓட்டம் எதுவும் எடுக்காமல் கடைசி விக்கெட்டாக ஆட்டமிழக்க இலங்கை முதல் இனிங்சில் 144 ஓட்டங்களில் சுருண்டது.

ஆஸ்திரேலிய அணி சார்பில் வேகப்பந்து வீச்சாளர் பேட் கம்மின்ஸ் 4 விக்கெட்டும், அறிமுக வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட்சன் 3 விக்கெட்டும், மிட்செல் ஸ்டார்க் இரண்டு விக்கெட்டும் வீழ்த்தினர்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிடம் இனிங்ஸால் வீழந்த கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம்,ஜன.25

சிங்கர் நிறுவனம் 19 வயதின் கீழ்ப்பட்ட பிரிவு 3 (டிவின்-III) பாடசாலைஅணிகளுக்குஇடையே ஒழுங்கு செய்து நடாத்தி வரும் இரண்டு நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வீழ்த்தியது புனித பத்திரிசியார் கல்லூரி.

கடந்த செவ்வாய்க்கிழமை (23) கொக்குவில் இந்துக் கல்லூரியின் சொந்த மைதானத்தில் தொடங்கிய இப்போட்டியில் மைதானச் சொந்தக்காரர்களான இந்துக் கல்லூரி அணி நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடி 87 ஓட்டங்களையே பெற்றது.

புனிதபத்திரிசியார்கல்லூரியின் பந்துவீச்சு சார்பில் பியட்ரிக் 4 விக்கெட்டுகளையும், டெனிசிஸ் 3 விக்கெட்டுகளையும் சாய்த்திருந்தனர்.

இதன் பின்னர் தம்முடைய முதல் இனிங்ஸில் துடுப்பாடிய புனிதபத்திரிசியார்கல்லூரி அணி டிலக்சன் (70) மற்றும் இவான் ரோன்தன் (50) ஆகியோர் பெற்ற அரைச்சதங்களோடு 250 ஓட்டங்களை குவித்தது.

கொக்குவில்இந்துக்கல்லூரியின் பந்துவீச்சில் கஜனன் 86 ஓட்

டங்களைவிட்டுத்தந்து 7விக்கெட்டுகளை சாய்த்திருந்தார்.

தொடர்ந்து 163 ஓட்டங்கள் பின்தங்கியவாறுதமது இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இந்துக்கல்லூரி அணி, பத்திரிசியார் வீரர்களின் திறமையான பந்துவீச்சினால் வெறும் 63 ஓட்டங்களுக்குள் சுருண்டு இன்னிங்ஸ்தோல்வியினைதழுவியது.

இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் தோல்வியினை தழுவ பிரதான காரணமாக அமைந்த பத்திரிசியார் கல்லூரி அணியின் பந்துவீச்சில் டெனிசியஸ் 5 விக்கெட்டுகளையும், பியட்ரிக் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை தேவைக்கேற்ற அடிப்படையில் விசேட சுகாதாரக் பணியாளர்களை தற்காலிகமாக சேவையில் இணைத்துக்கொள்ளல்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் விசேட சுகாதார பணிக்காக தேவைக்கேற்ற அடிப்படையில் கடமையாற்றுவதற்கு ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை :-

1. உடல் ஆரோக்கியமானவராகவும்
11. 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்குட்பட்டவராகவும்
111. காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை :-

1. க.பொ.த. (சா/த) இல் இரு தடவைக்கு மேற்பட்டாமல் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு படங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கடமை :-

1. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் புகையூட்டல் இயந்திரம் இயக்க தயாராக இருத்தல் வேண்டும்.
2. மருந்து விசிறும் செயற்பாட்டை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. டெங்கு தடுப்பு கள செயற்பாடுகளை (துப்புரவு பணி உட்பட) செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகரின் கீழ் பணிபுரிய வேண்டும்.
5. ஏனைய பணிக்கப்படும் கடமைகளை செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

கடமையாற்றும் நாள் ஒன்றிற்கு சம்பளக் கொடுப்பனவாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் படிகள் உள்ளடங்கலாக ரூபா 1, 068.00 வழங்கப்படும். அத்துடன் பெற்றுக் கொள்ளும் சம்பளக் கொடுப்பனவிற்கான ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு செய்யப்படல் வேண்டும்.

தேவையான ஆளணிகளின் எண்ணிக்கை - 25 நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

உரிய பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ். மாநகர சபையின் தாபனப் பகுதியில் பெற்று பூரணப்படுத்தி, 03.02.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

24.01.2019

இந்த அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று மாலை அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் உயர் பீட உறுப்பினர் முத்து முஹம்மது தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடாளுமன்றத்தில் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பு தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து தென்னிலங்கையில் மிகவும் மோசமான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டு வருகின்றன. இது நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச்செல்லுமென தென்னிலங்கையில் இனவாதப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழர் பிரதேசத்தில் ஒரு வகையான பிரசாரம் – முஸ்லிம் பிரதேசத்தில் இன்னுமொரு வகையானபிரசாரம்,தென்னிலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் பிரசாரம் என்று இந்த நகல் அறிக்கையானது ஆளுக்கொரு விதத்தில் கூறு போடப்பட்டு ஒவ்வொருசாராரும் தத்தமது அரசியல் இருப்புக்காகவும் ஆதாயத்துக்காகவும் அதனைக் கையில் எடுத்துள்ளனர். தமிழில் ஒன்றிருப்பதாகவும் சிங்களத்திலே வேறொன்று இருப்பதாகவும் ஊடகங்கள் சிலவும் இந்தப் பிரசாரங்களை வரிந்து கட்டிக்கொண்டு முன்னெடுத்து வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டு தென்னிலங்கையின் சில கட்சிகள் இதனை ஒரு கருவியாக எடுத்து – இல்லாத பொல்லாத விடயங்களைச் சோடித்து–கதைகளைக்கட்டவிழ்த்துள்ளன. எப்படியாவது இந்தத் தீர்வுத்திட்ட முயற்சியை இல்லாமலாக்க வேண்டுமென மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் சூழ் நிலையில் வெறுமனே நூறு ஆசனங்களைப் கொண்ட பிரதமர் தலைமையிலான அரசு எவ்வாறு இதனை நிறைவேற்றப் போகின்றது ? அத்துடன் 85 ஆசனங்களைக்கொண்ட மகிந்ததரப்பினர் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எஞ்சிய நாடாளுமன்ற ஆயுட்காலத்துக்குள் எவ்வாறு அரசு இதனை நிறைவேற்றப் போகின்றது?

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும்பிரதான கட்சிகளுக்கிடையில் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளும், ஏட்டிக்குப்போட்டியான செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டிருக்கும்போது இதனை நிறைவேற்றுவது சாத்தியமாக தென்படவில்லை . அதுமாத்திரமன்றி 2/3 பெரும்பான்மை அதாவது 150 வாக்குகளால் இது நிறைவேற்றப்படவேண்டும் . அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். இந்த இக்கட்டான நிலையில் தீர்வுத்திட்டம் பற்றிய ஒரு நம்பிக்கையை இந்த அரசின் காலத்தில் நாம் எதிர்பார்க்க முடியுமா?

தேர்தல் வந்துவிட்டால் தீர்வுத் திட்டத்தை அப்படி உருவாக்குவோம் – இப்படி உருவாக்குவோம் என்று வாக்குறுதி தரும் நிலையே இருந்துவருகின்றது.

இந்த நாட்டிலே வடக்கிலே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடியமைக்கும் தென்னிலங்கையில் இளைஞர்கள் ஆயுதக் கிளர்ச்சி நடத்தியமைக்கும் மூல காரணம் பேரினத்து அரசியல் வாதிகளே. இவ்வாறான பிரச்சினைகளின் ஆரம்ப கர்த்தாக்களும் அவர்களேதான்.

எனவே இந்த நாட்டிலே இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டுமெனில் மூவின மக்களினது பிரதிநிதிகளும் மனம்விட்டு பேசி எல்லோருக்கும் பொருத்தமான ஒரு தீர்வு திட்டம் உருவாக்கப்பட்டு அதனை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும். இதுவே காலத்தின் தேவையாக இருக்கின்றது – என்றார். (ஐ)

மிக எளிமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைசி மகன் ரோஹித ராஜபக்ஷ நேற்று திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார்.

அவரதுநீண்டகாலகாதலியான டட்யானா லீ என்பவரையே பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் ரோஹித ராஜபக்ஷ கரம் பிடித்துள்ளார்.

ராஜபக்ஷவின் குடும்ப கிராமமான வீரக்கெட்டியவில் ரோஹிதவின் திருமண நிகழ்வுகள் நடைபெற்றன.

திருமண வைபவம் வேறு அரசியல்வாதிகளின் வாரிசுகளின் திருமணம் போன்று 5 நட்சத்திர ஹோட்டல்களில் நடத்தப்படவில்லை. மிகவும் எளிமையான முறையில் வீரக்கெட்டிய கிராமத்தில் மெதமுலன வீட்டில் திருமணம் நடைபெற்றது.

திருமணத்துக்கு வழங்கப்பட்ட உணவுகள்உள்ளூர்உணவுகளாகும். அயல்வீட்டவர்களினாலேயே திருமணத்துக்கான உணவுகள் தயாரிக்கப்பட்டன.

நாட்டுக்குப் பகிரங்கப்படுத்தாமல் மெதமுலன கிராம மக்களுக்கு மாத்திரம் திருமணத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திருமணத்துக்கு வருபவர்களுக்கு ரணவரா இலைகள் மற்றும் விளாம்பழம் கொண்டு தயாரிக்கப்பட்ட பானமே வழங்கப்பட்டுள்ளது.

மட்பாண்டங்களைக்கொண்டு இந்தத்திருமணஉணவுகள்சமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். (ஐ)

காங்கேசனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையமொன்று இன்று; திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையத்தைவலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்ததுடன் எரிபொருள் சேவைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வலிகாமல் வடக்கு மக்கள் 1990 ஆம் ஆண்டு தங்களது நிலங்களிலிருந்து இடம் பெயர்ந்தனர். அதன் பின்னர் பல ஆண்டுகளாக நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும், முகாமகளிலும் அகதிகளாக வாழ்ந்து வந்தனர்.

அந்த மக்களின் காணிகள் தற்போது படிப்படியாக விடுவிக்கப்பட்டுவருகின்றன. இதனையடுத்து அந்த மக்களின் தேவைகளில் ஒன்றாக கருதப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையம்து கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து கடந்த 2017 ஆம் ஆண்டு பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-07)

சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யாகூப் அம்மையாருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சிங்கப்பூரின் இஸ்தானா மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதியை, சிங்கப்பூர் ஜனாதிபதி சிநேகபூர்மாக வரவேற்றார். அதனைத்தொடர்ந்து இருநாட்டுத் தலைவர்களும் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இலங்கைக்கும்சிங்கப்பூருக்குமிடையில் காணப்படும் இருதரப்புதொடர்புகளைபலமாகமுன்னெடுத்து செல்வது தொடர்பாக இதன்போது அரச தலைவர்கள் கவனம்செலுத்தியதுடன், அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் தற்போது இலங்கை முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து சிங்கப்பூர் ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்தார்.

அத்துடன் போதைப்பொருள் தொடர்பில் இலங்கை முகங்கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் வலுவான வேலைத்திட்டங்களைச் சிங்கப்பூர் ஜனாதிபதி பாராட்டினார்.

சிங்கப்பூர் ஜனாதிபதியினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த விசேட விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். (ஐ)

1000 ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு எப்போதும் ஒத்துழைப்புக்களை வழங்கும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்அடைக்கலநாதன்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களின் பெருமளவிலான நிலங்கள் கபளீகரம் செய்யப்படாமைக்குமலையக மக்களே காரணம் என்றும், எனவே, மலையக மக்களின் போராட்டத்திற்கு தமிழர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

அதிகாரங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான ஜப்பானிய மற் றும் ஆஸ்ரேலியத் தூதுவர்களை நேற்றுக் கொழும்பில் சந்தித்த போதே அவர் இந்த விடயத்தை எடுத்துக் கூறினார்.

இலங்கைக்கான ஆஸ்ரேலியத் தூதுவராகக் கடமையாற்றி தனதுசேவைக் காலத்தைநிறைவு செய்து செல்லும் பிரைஸ் ஹட்சிசன் நேற்றுச் சம்பந்தனைச் சந்தித்தார். அதேபோல், இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிராசுகியமாவும்கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்துப்பேசினார்.

இந்தச் சந்திப்புகளில் சமகால அரசியல் விடயங்கள் மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இரண்டுபிரதான கட்சிகள் காட்டும் அக்கறை போதுமானதாக இல்லை என சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தையும் சம்பந்தன் வலியுறுத்தினார்.

இரண்டு பெருன்பான்மைக் கட்சிகளும் புதிய அரசமைப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்கள் குறித்து தமது மக்களுக்கு தெளிவுபடுத்துவதில் அக்கறையின்றிச் செயற்படுவதாகவும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கம் நேர்மையானதாகவும் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரங்களை உபயோகிக்கக் கூடிய வகையில் இருத்தல் அவசியம் எனவும் சம்பந்தன் கூறினார் எனக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

நாயாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியது.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள நிலையில் புத்தர் சிலை அமைக்கப்பட்டு நேற்று முன்தினம், பொலிஸார் மற்றும்தொல்லியல்திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த பிக்குவால் திறந்துவைக்கப்பட்டது.

சட்டவிரோதமான இந்த நடவடிக்கைதொடர்பில்முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது. அதன்போதே நீதிமன்றம் இந்த இடைக்காலக் கட்டளையை வழங்கியது.

கடந்த 14 ஆம் திகதி நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவிலில்பொங்கல்வழிபாடுகளுக்காக மக்கள் சென்றவேளை அப்பகுதியில் குடியிருக்கும் பௌத்த துறவிக்கும் மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது.

இந்த முறுகல் நிலை தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார், நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர். அதனையடுத்து எதிர்வரும் 29ஆம் திகதி வழக்கிற்கு வருமாறு முரண்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும்அவசரநிலையொன்றை உணர்ந்து, ஆலய நிர்வாகத்தினர் மற்றும் தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வி.நவநீதன் ஆகியோர் நகர்த்தல் பத்திரம் ஒன்றின்மூலம் அது தொடர்பன வழக்கை கடந்த புதன்கிழமை மாற்றி வழக்கு நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை வழக்கு விசாரணைகளில், புத்தர் சிலை அமைக்கப்பட்டமை சட்டவிரோதமானது எனத் தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட விவரங்களைக் கிராம மக்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் வெளிப்படுத்தினர். இதனால் அந்த வழக்கு மிகவும் முக்கியத்துவம் உடையதாக மாறியது.

அத்துடன், முரண்பாட்டில் ஈடுபட்ட பௌத்த துறவியையும் நேற்று மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்து

இந்த நிலையில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் பிக்குதரப்பினரும், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத் தரப்பினரும் நீதிமன்றத்தில்நேற்றுமுன்னிலையாகினர்.

புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதி வர்த்தமானி மூலம் பௌத்த விகாரை அமைப்பதற்கான இடமாக அடையாளம் காணப்பட்டதாகப் பிக்குதரப்பினர் தெரிவித்தனர். எனினும் விகாரை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இடம் செட்டிமலை என்றும், செட்டிமலைக் கிராமம் என்றும் செட்டிமலை கிராம சேவகர் பிரிவு என்றும் அந்தக்கடிதத்தில்காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத் தரப்பினர் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

தொல்லியல் திணைக்களத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட இடம் அதுவல்ல என்றும் அவ்வாறான இடம் ஒன்று இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரை எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது. அன்றுவரை புத்தர் சிலை அமைக்கும் பணிகளை எவருமே முன்னெடுக்கக் கூடாது என நீதிமன்று இடைக்காலத் தடை விதித்தது. (ஐ-07)

ஜனவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பேன்.

– இவ்வாறு தொழில் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

2015ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியொன்றிலேயே வாக்குவேட்டைக்காக பிரதானதொழிற்சங்கமொன்றால் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனால் பெரும் குழப்பநிலை உருவானது.

2015இல் கைச்சாத்திடப்பட வேண்டிய உடன்படிக்கை 2016 ஜுன் மாதமளவிலேயே கைச்சாத்திடப்பட்டது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் குறித்த ஆண்டில் நவம்பர் மாதமே வெளியிடப்பட்டது.

இதன்படி 2018ஆம் ஆண்டில் குறித்த ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்வதற்குரிய பேச்சுகள் ஆரம்பமாகின. இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இறுதிக் கட்டத்தை அடைந்த வேளையில் தான் நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டு, ஆட்சிமாற்றம்நிகழ்ந்தது.

அதன்பின்னரும் பேச்சுகள் நடத்தப்பட்டிருந்தாலும் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

நாள் சம்பளத்துக்கும், அடிப்படை நாள் சம்பளத்துக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது. தொழிலாளர்கள் அடிப்படை நாள் சம்பளத்தையே ஆயிரம் ரூபாவாக்குமாறு கோருகின்றனர்.

பெருந்தோட்டத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன் நான். தொழிற்சங்கத்திலும் பதவி வகித்துள்ளேன். எனவே, தொழிலாளர்களுக்கு ஆயிரம் அல்ல 1500 ரூபா கிடைத்தால்கூட நான் மகிழ்ச்சியடைவேன்.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் நாளையும் (25) பேச்சு நடைபெறவுள்ளது. அதன்போது நான் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளேன்.

அதாவது, சம்பளப் பிரச்சினை குறித்து இன்னும் ஓரிரு நாட்களுக்குள் அல்லது இம் மாதம் முடிவடைவதற்குள் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் துறைசார் அமைச்சர் என்ற வகையில் அதில் தலையிட்டு, அதிகாரங்களைப் பயன்படுத்திதொழிலாளர்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் – என்றார். (ஐ)

மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகன் ரோஹித ராஜபக்ஷவின் திருமண நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராகஅழைக்கப்பட்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கியஸ்தர்களுடன் அந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

பிரதமர் ரணிலுடன் அமைச்சர்களான மங்கள சமரவீர, கபீர் ஹாஷிம், ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து ஒரே ஹெலியில் தங்காலைக்குப் பயணத்தை மேற்கொண்டனர்.

திருமண நிகழ்வுக்காக ஹெலியில் சென்று இவர்கள் இறங்கிய போதுசற்றுப்பரபரப்பானசூழ்நிலை அங்கு நிலவியது.

இவர்களை இரு கரம் கூப்பி வரவேற்ற ராஜபக்ஷ குடும்பத்தினர் மிகவும் மகிழ்வுடன் அளவளாவினர். (ஐ)

புதிய அரசமைப்பு வரைவைத் தமிழர் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கக்கூடாது

அவைத் தலைவர் சிவஞானம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 25

புதிய அரசமைப்பு வரைவில் சாதகமான பல அம்சங்களும், பாதகமான பல அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாதகமான விடயங்களை நாங்கள் நிராகரிக்கலாம். ஆனபோதும் புதிய அரசமைப்பு வரைவைத் தமிழர் தரப்பு ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதைத் தவிர்த்துப் பரிசீலிக்க வேண்டும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே .சிவஞானம் தெரிவித்தார்.

ஒக்ரோபர் – 26 இல் நிகழ்ந்த அரசியல் மாற்றமும் அதன் பின்னரான எதிர்பார்ப்புக்களும் எனும் தலைப்பிலான விசேட அரசியல் கருத்தரங்கு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபை அமைச்சுக்கள் தோன்றுவதற்கு மிகப் பெரிய காரணமிருக்கின்றது. எங்கள் அமைச்சர்கள் அமைச்சுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் காணப்படவில்லை.

அதிகாரிகளின் நிலைப்பாடுகளை நான் என் கண்களூடாக நேரடியாகப் பார்க்கின்றேன். அதிகாரிகள் தாங்கள் நினைத்தது போன்று தான் செயற்பட்டு வருகின்றார்கள்.

ஆனால், புதிய அரசமைப்பு வரைவில் மாகாண சபையின் செயலாளர்கள் மாகாண அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்ற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புக்கான வரைவை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கும் கருத்துக்களுடன் நான் உடன்படவில்லை. புதிய அரசமைப்பு வரைவில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன.

சில சொற்களில் மாத்திரம் நாங்கள் தொங்கிக் கொண்டிருக்காமல் புதிய அரசமைப்பு வரைவிலுள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நாங்கள் புதிய அரசமைப்பு வரைவுக்கெதிராக முன்வைக்கும் காரணங்களைத் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் உள்வாங்கி எங்களுக்கெதிராகச் செயற்படுகின்றன. இதனை அடிப்படையாக வைத்து நோக்கும்போது நாங்களே குற்றவாளிகள் – என்றார். (ஐ)

தமிழின அழிப்புக்கு நீதி கோரி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

ஜெனிவா,ஜன.25

இலங்கையில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்கு நீதி கோரி ஜெனிவாவில் மாபெரும் போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஜெனீவா ரயில் நிலையத்துக்குச் சமீபமாக உள்ள பூங்காவில் இந்தப் போராட்டம் ஆரம்பமாகி ஜெனீவா முருகதாசன் திடலை அடைந்தது. இதில் பெரும் எண்ணிக் கையான புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்று, இலங்கையில் தமிழின அழிப்புக்கு சர்வதேசம் நீதி பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கோரினர். (ஐ)

போதைப்பொருள் ஒழிப்புக்கு சிங்கப்பூரின் தொழில்நுட்பம்

ஜனாதிபதி மைத்திரியுடனான பேச்சில் அந்த நாட்டு அதிகாரிகள் இணக்கம்

போதைப்பொருள் ஒழிப்புக்காக சிங்கப்பூர் அரசால் பயன்படுத்தப்படும் திறன் மற்றும் தொழிநுட்ப அறிவை இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அறிமுகப்படுத்த அந்நாட்டு அதிகாரிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இணக்கம் தெரிவித்தனர்.

சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சிங்கப்பூர் அரசின் சமூக, குடும்ப மேம்பாட்டு அமைச்சரும் தேசிய அபிவிருத்தி பிரதியமைச்சருமான டெஸ்மன் லீ உள்ளிட்ட அந்நாட்டின் போதைப்பொருள் ஒழிப்புச் சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் மெண்டரின் ஓரியன்டல் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் போதைப்பொருள் ஒழிப்புக்கு உதவுமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் போதைப்பொருள் ஒழிப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்துக்குச் சிங்கப்பூர் ஒத்துழைப்பு வழங்குவது குறித்து ஆராய்வதற்காகச் சிங்கப்பூர் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசேட பிரதிநிதிகள் சிலர் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

சிங்கப்பூர் அரசு போதைப்பொருள் சுற்றிவளைப்பு தொடர்பில் பின்பற்றுகின்ற நடைமுறைகள் குறித்தும் சட்டவிரோத போதைப்பொருள்களை ஒழிப்பதற்காக அந்நாட்டு அரசு முன்னெடுத்துவரும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் பற்றியும் ஜனாதிபதிக்கு அந்நாட்டு அதிகாரிகள் விளக்கமளித்ததுடன், போதைப்பொருள் ஒழிப்புக்காக அந்நாட்டின் அமைச்சுக்கள் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்துவரும் போதைப்பொருள் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசு தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

போதைப்பொருள் ஒழிப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் பொலிஸ் அதிகாரிகளைப் பாராட்டி அவர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

சூரிய சக்தி மூலமும் இனி நீர் விநியோகத் திட்டங்கள்

கொழும்பு, ஜன. 25

நீர் மின்சாரத்தின் மூலம் மட்டுமே சுத்தமான குடிதண்ணீரை விநியோகிப்பதற்குக் கூடுதலான செலவு ஏற்படுவதால், சூரிய சக்தியால் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தியும் சில குடிதண்ணீர் விநியோக திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் ஜப்பானிய சர்வதேச அபிவிருத்தி நிதியத்தினூடாக முன்வைக்கப்பட்ட 20 புதிய குடிதண்ணீர்த் திட்டங்களை நிறுவுதற்கான உயர்மட்ட கலந்துரையாடல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தின்போது ஜப்பான் தொழில்நுட்பவியல் மையத்தினால் இந்த திட்டம் சம்பந்தமாக முழுமையான ஆய்வு அறிக்கையொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அங்கு அமைச்சர் கருத்து தெரிவிக்கையில் –

இந்தத் திட்டத்தை குறுகிய காலத்தில் விரைவாக ஆரம்பிக்கும் முகமாக நகரத் திட்டமிடல், நீர் வழங்கல், உயர் கல்வி அமைச்சின் மூலமாக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படும். இந்தத் திட்டத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார்.

யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவு, அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், பாணமை, மன்னார் மாவட்டத்தில் மடு, முசலி, வவுனியா மாவட்டத்தில் வவுனியா தென்பகுதி, வெங்கலசெட்டிகுளம், கம்பஹா மாவட்டத்தில் மீரிகம, திருகோணமலை மாவட்டத்தில் கோமரன்கடவல, மொரவாவ, குச்சவெளி, மாத்தறை மாவட்டத்தில் முலதியன, கண்டி மாவட்டத்தில் உடபலாத்த, மினிப்பே, குருநாகல் மாவட்டத்தில் முந்தலம, புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 20 திட்டங்களை ஆரம்பிப்பதற்காக 40 கோடி அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கொழும்பு, ஜப்பான் தூதரகத்தின் முதல் செயலாளர் சகாஹி வதரணி, நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன, மேலதிக செயலாளர்களான ஏ.சி.எம். நபீல், எல். மங்கலிகா, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தலைவர் கே.ஏ. அன்ஸார், பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர, மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களப் பணிப்பாளர் ஜெயலத் ஹேரத் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.